REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒக்டோபர் 9 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 239 | Monday 09, October, 2023 | 20பக்கங்கள் | 50/-

## 2023 ஆம் ஆண்டுக்கான கொழும்பு 'வான்' மாநாடு
### இன்றும் நாளையும் நடத்த ஏற்பாடு

இலங்கை விமானப்படை தொடர்ந்து 06ஆவது முறையாக ஏற்பாடு செய்துள்ள கொழும்பு வான் கருத்தரங்கு இரத்மலான விமானப் படைத்தளத்தின் ஈகிள் லேக் சைட் மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று 09, நாளை 10ஆம் திகதி வரை உள் நாட்டு வெளிநாட்டு மற்றும் 06

## மட்டு. புனித மைக்கல் கல்லூரியில் ஜனாதிபதிக்கு மகத்தான வரவேற்பு



மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழர் பாரம்பரிய முறைப்படி ஆரத்தியெடுத்து வரவேற்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். ஜனாதிபதி, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான எஸ். வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரை மட்டு. புனித மைக்கல் கல்லூரியின் அதிபர் அன்ரன் பெனடிக்ற் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

# கிழக்கை பொருளாதார ரீதியில் பலப்படுத்த 10 ஆண்டு திட்டம்

## மகாவலி திட்டத்தில் விடுபட்ட ஏ, பீ வலயங்களை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை

### செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

**நிலாவெளியில் இருந்து பானம வரை விரிவான சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் விரிவான திட்டம்**

திருகோணமலையின் அபிவிருத்தி உட்பட கிழக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு அடுத்த 10 ஆண்டுகளில் விரிவான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மகாவலி திட்டத்தில் விடுபட்ட இரண்டு மகாவலி ஏ மற்றும் பீ வலயங்களை அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்தி 06





03
**IORA 23 ஆவது அமைச்சர் மட்டக் கூட்டம் கொழும்பில்**
இலங்கைக்கு தலைமை பதவி

## இஸ்ரேல் - பாலஸ்தீனம் மோதலில் இலங்கையர் ஒருவர் காயம்

### தாக்குதல்கள், வன்முறைகள் குறித்து இலங்கை கவலை

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் தாக்குதல்கள் மற்றும் வன்முறை அதிகரித்துள்ளமை குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான மோதலில் இலங்கையர் ஒருவர் காயமடைந்துள்ளார். இதையடுத்து அங்குள்ள இலங்கையர் தொடர்பில் தூதரகம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் தாக்குதல்கள் மற்றும் வன்முறை அதிகரிப்பதால் ஏற்படும் உயிரிழப்பு




கள் குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக வெளிநாட்டமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அழைப்பு விடுத்துள்ளதுடன் மேலும் 06

## கட்அவுட், சுவரொட்டிகளில் எனது புகைப்படங்களை தவிர்க்கவும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

கட் அவுட்கள் மற்றும் சுவரொட்டிகளில் இனி மேல் தனது புகைப்படத்தை காட்சிப்படுத்த வேண்டாமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

சுவரொட்டிகளில் தனது புகைப்படத்தை காட்சிப்படுத்துவதை தவிர்க்குமாறு ஜனாதிபதி ஏனைய அரசியல் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசியல் கோசமன்றி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே இன்றைய முக்கிய தேவையென வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கட்அவுட் மற்றும் அரசியல் கோசங்கள் நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்திற்கு இழுத்துச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டார். 06

## பாராளுமன்றத் தேர்தல் முறையை மாற்ற அரசியலமைப்பில் திருத்தம்

### விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு

பாராளுமன்றத் தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கான அரசிலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் சார்பில் நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ இதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார். உத்தேச அரசிலமைப்பு திருத்



தத்தின்படி, 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 160 பேர் தொகுதி ரீதியாக மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். எஞ்சிய 65 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அல்லது மாகாண மட்டத்தில் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 06

## எதிர்காலத்தில் அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்புகள் இல்லை

### புதிய அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே

அரச சேவையில் எதிர்காலத்தில் மிகவும் அத்தியாவசியமான துறைகளைத் தவிர வேறு எந்தவொரு அரச துறையிலும் புதிய ஆட்சேர்ப்புக்கள் கிடையாதென அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்போதைய பொதுப்பணித்துறை அரசுக்கு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது குறித்து அவர் மேலும் 06



## நீதிபதி விடயத்தை பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை:

### TULF செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவிப்பு

முல்லைத்தீவு, நீதிபதி விடயத்தை பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை. அதனை நிறுத்திக்கொள்ளலாமென்பதே தனது கருத்தென தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி தலைமையாகத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். 06



## பட்டாசுக் கடையில் பாரிய தீ விபத்து

தமிழகம் கர்நாடக எல்லையில் அத்திப்பள்ளி பகுதியிலுள்ள பட்டாசுக் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் 14 பேர், உடல் கருகி பலியாகியுள்ளனர். பாரவூர்தியிலிருந்து பட்டாசுகளை இறக்கி வைக்கும்போது எதிர்பாராத விதமாக இத்தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பலியானவர்களில் 11 தொழிலாளர்கள் தமிழகத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீ விபத்தில் சிக்குண்ட பலர் காயங்களுக்குள்ளானதால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## பேருவளை கெச்சிமலை தர்காவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த விஜயம்



பேருவளைக்கு நேற்று விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரலாற்று பிரசித்திபெற்ற கெச்சிமலை தர்காவுக்கும் விஜயம் செய்தார். அவரை அலவியதுல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர் அஷ்ஷெய்கு ஸகி அஹமத் காலிப் அலவி தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

## மதுரங்குளி ATM இயந்திரத்தில் சுமார் 01 கோடி ரூபா கொள்ளை

### சனிக்கிழமை இரவு துணிகர சம்பவம்




**(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)**

புத்தளம் மதுரங்குளி 10 ஆம் கட்டைப் பிரதேசத்திலுள்ள பிரபல தனியார் வர்த்தக வங்கியின் ஏ.டி.எம் இயந்திரத்திலிருந்து ஒரு கோடிக்கும் அதிகமான பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை (07) இரவு 11.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற போது, மதுரங்குளி 10 ஆம் கட்டைப் பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கருகிலுள்ள தனியார் ஏ.டி.எம் இயந்திரத்துக்கு மோட்டார் சைக்கிளில் மூவர் 06

## பலத்த மழையால் 07 பேர் மரணம் 23 பேர் காயம், 54,440 பேர் பாதிப்பு

நாட்டில் பெய்த கடும் மழையால் 07 பேர் உயிரிழந்து, 23 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் 13,352 குடும்பங்களைச் சேர்ந்த 54,440 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தின் 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் 273 குடும்பங்களைச் சேர்ந்த 1, 041 பேரும், கேகாலை மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் 278 குடும்பங்களைச் சேர்ந்த 1,058 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.




கொழும்பு மாவட்டத்தின் மூன்று செயலகப் பிரிவுகளில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 293 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 06



03
**நீதிமன்ற பாதுகாப்பிலிருந்த 120 கிலோ கஞ்சாபொதி மாயம்**

## நாகபட்டிணம் - காங்கேசன்துறை கப்பல் சேவை நாளை முதல்

### நேற்று பரீட்சார்த்த ஓட்டம்



**(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)**

நாகபட்டிணத்திலிருந்து காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல் போக்குவரத்து நாளை (10) ஆரம்பமாகிறது. அறுபது கடல் மைல் தூரத்தை 06



## பதுளுஓயா ஆற்றில் கார் விழுந்து விபத்து

### சாரதி நீந்தி உயிர் பிழைப்பு

பதுளை பண்டாரவளை பிரதான வீதியில் உடுவர நில்போவில பிரதேசத்தில் காரொன்று வீதியை விட்டு விலகி, பதுளு ஓயாவில் வீழ்ந்துள்ளது. இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (08) காலை இடம்பெற்றுள்ளது. எல்லயிலிருந்து பசறை நோக்கிச் சென்ற கார் ஒன்றே, 06



## ஆப்கானில் பாரிய நில நடுக்கம் இதுவரை 2,000 பேர் வரை பலி



ஆப்கானிஸ்தானின் ஹெராத் நகருக்கு வடமேற்கே 40 கி.மீ. தொலைவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவானதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் ஏற்பட்ட இந்நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக மீண்டும் 05 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாகவும் அந்த மையம் கூறியுள்ளது. இதில் இதுவரை 320க்கும் மேற்பட்டோர் 06

## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

### சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



நாட்டின் 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, காலி, மற்றும் மாத்தறை 06

# பாதுகாப்பு வேலி அமைத்தும் மனிதன், யானை மோதல் நாளுக்கு நாள் அதிகரிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

**– கலாநிதி விஜயமோகன்**

இலங்கையில் 4500 கிலோமீற்றர் யானை வேலி காணப்படுகின்றது. இலங்கையில் பல இடங்களில் யானை வேலிகள் போடப்பட்டாலும் அனேகமாக நடைமுறைப்படுத்தப்படாமைக்கு காரணம் மக்கள் அதனை பராமரிப்பதில்லை. அரசாங்கத்தின் சொத்து, அரசாங்கம் செய்தது, ஆகவே அரசாங்கம்தான் பார்க்கவேண்டும் என நினைத்து சரியாக கவனிப்பதில்லை என வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிர்த்துறை திணைக்களத்தின் தலைவரும் விரிவுரையாளருமான கலாநிதி விஜயமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிர்த்துறை திணைக்களத்தின் தலைவரும் விரிவுரையாளருமான கலாநிதி விஜயமோகனின் உருவாக்கத்தில் இலங்கையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட யானை வேலி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மன்னாகண்டல் அ.த.க.பாடசாலையினை சுற்றி அமைக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.


இலங்கையில் வனவிலங்கு சம்மந்தமான கலாநிதி பட்டப்படிப்பினை முடித்துக்கொண்ட கலாநிதி விஜயமோகன இலங்கையில் வனவிலங்கு சம்பந்தமான துறையில் ஆர்வம் கொண்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த யானை வேலி அமைப்பு தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் யானை மனித மோதல் என்பது பலகாலமாக இருக்கும் பாரிய பிரச்சினை அரசாங்கத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் அளவிற்கு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

யானை புத்தி கூர்மையான விலங்கு அமைக்கப்படும் வேலிகளை இலகுவாக உடைப்பதால் புதுவிதமான வேலியினை அமைக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளது. வேலியின் அமைப்பினை மாற்றி அமைத்து செய்தால் யானை மனித மோதலை தவிர்க்கலாம் என்ற அமைப்பில் தொங்கு வேலி என்ற வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் எல் வடிவ தொங்கு வேலி வடிவமைக்கப்பட்டு அமைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 2017 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் தங்களுக்கும் இதனை அமைத்து தருமாறு



கேட்டதற்கு இணங்க அங்கு சென்று அமைத்து கொடுத்தேன்.

இந்தியாவின் அசாம், கர்நாடக, தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் 2000 ஆயிரம் கிலோமீற்றர் வரை தொங்கு வேலியினை அமைத்துள்ளார்கள்.

இந்த தொங்கு வேலியில் மாற்றம் பெற்று ஐ வடிவ தொங்கு வேலியினை நான் புதிதாக வடிவமைத்துள்ளேன். இது முதன் முறையாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மன்னாகண்டல் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## வடக்கின் உதயம்

### கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவுவிழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவுவிழாவையொட்டி நல்லூர் கோவில் பின்புறத்தில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை வரை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபவனி இடம்பெறவுள்ளது.

மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நிறைவுவிழா இடம்பெறவுள்ளது. கல்வி அமைச்சர் சுசில்பிரேம்ஜெயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் முன்னிலையில் கலாசாலையின் நூற்றாண்டு சஞ்சிகையாகிய கலைமலர் வெளியீடு, அஞ்சல் திணைக்களத்தின் இருபத்தைந்து ரூபா முத்திரை வெளியீடு, முதல் நாள் அஞ்சல் உறை வெளியீடு, முன்னாள் அதிபர்மார் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளதாகவும் கலாசாலை அதிபர் ச.லலீசன் தெரிவித்தார்.

## அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் விண்ணப்பம் கோரல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

அகில இலங்கை சைவப்புலவர் சங்கமானது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தவுள்ள சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டங்களுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை இல 610 காங்கேசன்துறை இணுவில் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15/11/2023 ஆம் திகதிக்கு முன்னராக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் எனவும், விண்ணப்பப் படிவம் பெறல் உள்ளிட்ட மேலதிக தகவல்களுக்கு 777197067 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா. கமலநாதன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் இடம்பெற்ற சர்வதேச ஆசிரியர் தின விழாவின் போது கல்லூரி அதிபர் N.M.Shafie க்கு, கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அதிபருடன் கல்லூரி ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் இளைஞன் வாளுடன் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் வாள் ஒன்றுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் , காரைநகர் ஊரி பகுதியை சேரந்த இளைஞன் வாள் ஒன்றை வைத்திருப்பதாக ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பொலிஸார் இளைஞனின் வீட்டை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

அதன்போது வீட்டில் இருந்து வாள் மீட்கப்பட்டதை அடுத்து, வீட்டில் இருந்த 28 வயதான இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தென்மராட்சி–தனங்கிளப்பு பகுதியில் துப்பாக்கி

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு அறுகுவெளிப் பகுதியில் உள்ள காணியொன்றில் துப்பாக்கி மற்றும் எறிகணை ஆகியன காணப்படுவதாக ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அப் பகுதி ஊடாக கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்ற நபரொருவரே வெடிபொருள்களை அடையாளம் கண்டு கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதன்போது ரி56ரக துப்பாக்கி ஒன்றும், எறிகணை ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மலைச்சாரல்

### கனகராஜாவின் கவிதை நூல் அறிமுக விழா

காவத்தையூர் பழனியாண்டி கனகராஜாவின் எண்ணங்களின் வண்ணங்கள் எனும் கவிதை நூல் அறிமுக விழாவானது எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு, ஸ்பிரிங்வெளி, மேமலை தமிழ் வித்தியாலய அதிபர் எஸ். திருச்செல்வம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் விசேட அதிதிகளாக ஊவா தமிழ் இலக்கியப் பேரவை தலைவர் கலாபூஷணம் அருண் தியாகு, ஊவா தமிழ் இலக்கிய பேரவை ஆலோசகர் ஏ.தங்கராஜா பிரதேச அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நூலானது கடந்த ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி, பசறை நூலக கேட்போர் கூடத்தில் ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் வெளியீடாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## மொனராகலை விவசாயிகளின் நலன் கருதி ரூ. 258 மில்லியன் செலவில் பல்வேறு திட்டங்கள்

**(ஊவா சுழற்சி நிருபர்)**

மொனராகலை மாவட்டத்தின் விவசாயிகளின் நலன் கருதி ரூபா 258 மில்லியன் செலவில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இம் மாவட்டத்தில் வாழும் சேனை மற்றும் இதர பயிரினங்களை பயிரிடும் விவசாயிகளின் விளை பொருட்களை இலகுவில் ஒரே கூரையின் கீழ் சந்தைப்படுத்துவதற்கான சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக வாராந்த சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

இச்சந்தை ஊவா மாகாண பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் மூலம் 177 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வெல்லவாய வாராந்த சந்தை மற்றும் வாகனத் தரிப்பிடம் 45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சியம்பலாண்டுவ தொம்மகஹவல வாராந்த சந்தை மற்றும் 40 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மடுல்ல மாரி அராவ வாராந்த சந்தை போன்றவை விவசாய ராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ மற்றும் உயர் அதிகாரிகளினால் கடந்த சனிக் கிழமை மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.



## கொட்டகலை நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த 32 சிசிடிவி கேமராக்களை பொருத்த திட்டம்

கொட்டகலை நகரின் பாதுகாப்பையும், பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கில் கொட்டகலை நகர் முழுவதிலும் 32 சிசிடிவி கேமராக்களை பொருத்த கொட்டக்கலை ஐக்கிய வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் மாதாந்த கூட்டத்தொடர் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தான ஆலய மண்டபத்தில் (07.10.2023) இடம்பெற்றது இதன்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் தீபாவளியை இலக்கு வைத்து கொட்டகலை நகரின் பாதுகாப்பினை உறுதி செய்ய தீர்மானித்துள்ள ஐக்கிய வர்த்தக சங்கம் நகருக்கு வரும் பொது மக்களின் நன்மை கருதி பல்வேறு தீர்மானங்களை கலந்துரையாடல் மூலம் எடுத்துள்ளது.

குறிப்பாக கொட்டகலை நகரில் சமீப காலமாக வர்த்தக நிலையங்கள், வீடுகள் என பல இடங்களில் கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் அதை தடுக்கும் முகமாக நகர வர்த்தகர்களின் பங்களிப்பில் 32 சிசிடிவி கேமராக்களை நகரம் முழுவதும் பொருத்த ஏகமானதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் இவ்வாறு பொருத்தப்படும் பாதுகாப்பு கேமராக்களை 24 மணித்தியாலமும் கண்காணிக்க திம்புள பத்தனை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ் ஆசிரிய உதவியாளர் 100 பேருக்கு நிரந்தர நியமனம்



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் மலையக தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் உதவியாளர்களாக சேவையாற்றும் 100 பேருக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் அண்மையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்ற 445 பேர் 2015ஆம் ஆண்டு சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள மலையக பாடசாலைகளுக்கு ஆசிரியர் உதவியாளர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இம் மாகாணத்தில் ஆசிரியர் பயிற்சியை முழுமையாக நிறைவு செய்துள்ள ஆசிரியர் உதவியாளர்கள் நூறு பேருக்கே ஆசிரியர் நிரந்தர நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ். விரசூரிய, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி, சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கே.ஏ.சுனிதா உட்பட சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர்கள் ஆசிரியர் உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பான சொற்பொழிவு

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம் ஒன்று கண்டியில் இடம் பெற உள்ளது. இது எதிர்வரும் 14ம் திகதி கண்டி புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூரி மண்டபத்தில் மு.ப 9. மணிக்க இடம் பெற உள்ளது.

இதில் விசேட சொற்பொழிவாளராக கலாநிதி ஜயந்தி ஶ்ரீ பால கிருஷ்ணன் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். 'மாணவர்களின் ஆளுமையில் ஆசிரியர்களின் பங்கு' என்ற தலைப்பில் இது இடம் பெறும். இதற்கான அனுசரணையை 'எரோ அறக்கட்டளை' வழங்குகிறது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 260 8310 அல்லது 077 780 8089 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும் படி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மது போதையில் போத்தலால் குத்தி ஒருவர் பலி

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

மதுபோதையில் ஒருவருக்கு ஒருவர் போத்தல்களால் குத்திக் கொண்டு ஒருவர் பலியான சம்பவம் ஒன்றும் எம்பிலிப்பிட்டிய தனமல்வில பிரதேசத்தில் நேற்று (8) இடம் பெற்றுள்ளது.

நண்பர்கள் மது அருந்திக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட வாக்குவாதத்தினால் நண்பர்கள் இருவர் ஒருவரை ஒருவர் போத்தல்களால் குத்தி கொண்டதால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை நடத்திவரும் எம்பிலிப்பிடிய பொலிசார் தெரிவித்தனர். தனமல்வில, காமினிபுர பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

# IORA 23 ஆவது அமைச்சர் மட்டக் கூட்டம் கொழும்பில்: இலங்கைக்கு தலைமை பதவி

இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் IORA 23 ஆவது அமைச்சர் மட்ட கூட்டம் 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது. இதன் தலைமைப்பதவி இம்முறை இலங்கைக்கு கிடைக்கிறது. இதையொட்டிய அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்துக்காக IORA சங்கத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் அதன் உறுப்பு நாடுகளின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளனர்.

அவுஸ்திரேலிய உதவி வெளியுறவு அமைச்சர் டிம் வொட்ஸ் (Tim Watts), பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஏ.கே. அப்துல் மொமன் (Dr A. K. Abdul Momen), இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் (Dr. Subrahmanyam Jaishankar), இந்தோனேசியாவின் அரசியல் சட்டம் மற்றும் அரசியல் விவகார அமைச்சரின் ஆலோசகர் ஆடம் முலவர்மன் டுகுவோ(Adam Mulawarman Tugio), ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர்அப்துல்லாஹியன் (Hossein AmirAbdollahian) , மலேசியாவின் வெளியுறவு அமைச்சர் டத்தோ. செரி திராஜா சம்ப்ரி அப்துல் காதிர் (Dato Seri Diraja Zambry Abdul Kadir), மொரீஷியஸின் வெளியுறவு, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மனீஷ் கோபின் (Maneesh Gobin), ஓமான் அரசியல் விவகாரங்களுக்கான உப செயலாளர் ஷேக் கலபா பின் அலி பின் இசா அல் ஹார்த்தி(Sheikh Khalifa bin Ali bin lssa AlHarthy), சிங்கப்பூர் பிரதமர் அலுவலக அமைச்சரும் கல்வி மற்றும் வெளிவிவகார இரண்டாவது அமைச்சருமான கலாநிதி முகமது மாலிகி பின் ஒஸ்மான்(Dr Mohamed Maliki Bin Osman), தென்னாப்பிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் கலாநிதி(திருமதி) நலேன்டி பாண்டோர் (Dr (Mrs) Naledi Pandor), தாய்லாந்தின் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் சிஹாசக் புவாங் கெட்கியோ(Sihasak Phuangketkeow), ஐக்கிய அரபு இராஜ்ஜிய பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்கள் உதவி அமைச்சர் சயீத் முபாரக் அல் ஹஜெரி(Sayeed Mubarak Al Hajeri), யெமன் வெளிவிவகார பிரதம அமைச்சர் அவ்சன் அப்துல்லா அஹமட் அல்ஆவுத்(Awsan Abdullah Ahmed Alaud) ஆகியோர் கொழும்பில் நடைபெறும் அமைச்சர்கள் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜப்பான் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் மசாஹிரோ கொமுரா (Masahiro Komura), கொரியா வெளியுறவு அமைச்சின் அரசியல் விவகாரங்கள் துணை அமைச்சர் சுங் பியுங் வோன்(Chung Byungwon), ஐக்கிய இராச்சியத்தின் இந்தோபசிபிக் அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியன்(Anne Marie Trevelyan), ஆகியோரும் இந்த கூட்டத்தில் இணையவுள்ளனர்.

அமைச்சர்கள் குழு என்பது இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் மிக உயர்ந்த அமைப்பாகும். தற்போதைய தலைவரான பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் தலைமைப் பதவியை வழங்கும்போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி சபைக்கு தலைமை தாங்குவார்.

இந்தக் கூட்டத்திற்கு முன்னதாக, வெளியுறவு செயலாளர் அருணி விஜேவர்தன தலைமையில், இந்து சமுத்திர எல்லை நாடுகள்

06



உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் மாணவர் தலைவர் சபை, செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஊடகவியலாளர் சங்கம் இணைந்து நடத்திய சர்வதேச ஆசிரியர் தின விழா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் சரத் பந்து குணசேக்கர தலைமையில் சுமார் 22 ஆசிரியர்கள் மற்றும் விரைவில் ஓய்வு பெறவிருக்கும் பல ஆசிரியர்கள் இங்கு கௌரவிக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம்.

# நாட்டில் வாகன திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

## உரிமையாளர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் வாகனத் திருட்டுச் சம்பவங்கள் பாரிய அளவு அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பல கோடி ரூபா பெறுமதியான வாகனங்களை திருடிய சந்தேக நபர் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளில் பல வாகன மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த "டோல்பின் சந்தன" என்ற நபரே மாவத்தகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது

சந்தேக நபர் போலி ஆவணங்களை தயாரித்து திருடப்பட்ட வாகனங்களை பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

காலி, தங்கல்ல, ஹோமாகம உள்ளிட்ட பல பகுதிகளில் இவர், வாகனங்களை திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் வாகனங்கள் வைத்திருப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மன்னார் – தனுஷ்கோடிவரை நீந்தி மாற்றுத்திறனாளி சிறுவன் சாதனை

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை சென்னையை சேர்ந்த மாற்றுத்திறனாளி சிறுவனொருவர் நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

பரத் மோகன், நிர்மலா தேவி தம்பதியின் மகனான சென்னையைச் சேர்ந்த ஹரேஷ் பரத் மோகன் தலைமன்னாரில் கடந்த 06 ஆம் திகதி இரவு 11.37 மணியளவில் கடலில் நீந்த ஆரம்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிமை பிற்பகல் 11.29 மணியளவில், சுமார் 11 மணி நேரம் 52 நிமிடம் நீந்தி தனுஷ்கோடி அரிச்சல் முனையை இவர் அடைந்துள்ளார்.

அரிச்சல்முனை வந்தடைந்த ஹரேஷ் பரத் மோகனை அவரது தாய், கண்ணீர் மல்க முத்தமிட்டு வரவேற்றதை பார்த்து அப்பகுதியிலிருந்த அனைவரும் நெகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஹரேஷ் பரத் மோகன் ஓட்டிசம் மற்றும் பேசும் திறன் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவரென்பது குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்ற பாதுகாப்பிலிருந்த 120 Kg கஞ்சா பொதி மாயம்

## கிளிநொச்சியில் CID யினர் விசாரணை

கிளிநொச்சி நீதிமன்ற பதுகாப்பு அறையிலிருந்த 120 கிலோ கஞ்சா பொதி மாயமாகியுள்ளது. இச்சம்பவத்தையடுத்து விசேட குற்றத் தடுப்பு பிரிவு, விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. கிளிநொச்சி நீதிமன்றத்தில் தடயப் பொருட்களாக ஆஜர் படுத்தப்பட்டு பாதுகாப்பறையில் வைக்கப்பட்ட 120 கிலோ கஞ்சா மாயமான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மாயமாகியுள்ளமை கண்டறியப்பட்டது.இதையடுத்து, புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர். கொழும்பிலிருந்து விரைந்த விசேட குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதன்படி ஊழியர்கள் மூவருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, களஞ்சியப் பகுதியிலிருந்து மதுபானங்கள் உள்ளிட்ட அழிக்கப்பட வேண்டிய பொருட்களும் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. களஞ்சிய பொறுப்பிலிருந்த இருவர் கனடா செல்ல முற்பட்டபோது அவர்களுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டது. துப்பரவு பணியிலிருந்த பெண் ஒருவர் மத்திய கிழக்கு நாட்டுக்கு செல்ல முற்பட்ட போது அவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பூட்டு உடைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சான்றுப் பொருள் களஞ்சியத்திற்கு பொறுப்பான ஊழியர்கள் பதிவாளருக்கு தகவல் வழங்கினர். இத்தகவலின்படி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே சான்றுப் பொருட்கள் மாயமான சம்பவம் தெரிய வந்தது.






# கடற்றொழில் மற்றும் நீரியல்வள புதிய சட்டவரைபுக்கு உரிய தரப்பினர்களிடமிருந்து பிரேரணைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளல்

அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆலோசனையின் பிரகாரமும் கௌரவ கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினதும் கௌரவ கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த அவர்களினதும் வழிகாட்டலின் பிரகாரம், கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் கடற்றொழில் துறையின் நலன் கருதி கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்தை நீண்ட காலம் பாதுகாத்தும் முகாமைத்துவம் செய்தும் நிலைபேறான அறுவடைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நடைமுறையிலுள்ள 1996ம் ஆண்டின் 02ம் இலக்க கடற்றொழில் நீரியல்வளச் சட்டத்தில் திருத்தங்கள் செய்து புதிய கடற்றொழில் மற்றும் நீரியல்வள வரைவொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை நிதர்சனமாக்குவதற்காக கடற்றொழிலுடன் தொடர்புடையவர்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு இறுதிவரைபு தயாரிக்கப்பட்டு கௌரவ கடற்றொழில் அமைச்சரினால் விரைவில் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஆகவே, குறிப்பிட்ட தரப்பினரின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை 2023 ஒக்டோபர் 20ம் திகதிக்கு முன்னர் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு தயவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

இச் சட்டமூலம் தேவைப்படுவோர் கடற்றொழில் திணைக்களத்தின் https://www.fisheriesdept.gov.lk எனும் இணையத் தளத்தில் அல்லது அனைத்து கடற்றொழில் மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.




செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி: +94-112446183-4
தொலைநகல்: +94-112541184

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 23ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான்

*தானும் அனுபவிக்காமல் தக்கவர்களுக்கு உதவிடும் இயல்பும் இல்லாமல் வாழ்கின்றவன், தன்னிடமுள்ள பெருஞ்செல்வத்தைத் தொற்றிக்கொண்ட நோயாவான்.*

# மாத்தறை மாவட்டத்தை பெரிதும் பாதித்துள்ள சீரற்ற காலநிலை!

நாட்டில் தென்மேல் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி தீவிரமடைந்துள்ளது. இதனை வளிமண்டலவியல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. அதன் விளைவாகவே பல பிரதேசங்களிலும் அடிக்கடி மழை பெய்து வருவதோடு, சில பிரதேசங்களில் 100 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

அதனால் தாழ்நிலப் பிரதேசங்கள் பலவற்றில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதோடு பல வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளன. அதனால் வாகனப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மழைவீழ்ச்சியினால் குளங்கள், நீர்த்தேக்கங்கள் என்பன நிரம்பி வழியும் நிலையை அடைந்துள்ளதோடு சில கங்கைகள் பெருக்கெடுத்தும் உள்ளன.

குறிப்பாக நில்வளா கங்கையின் நீர்மட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வந்த நிலையில் தற்போது நதிகள் பெருக்கெடுத்திருக்கின்றன. அதனால் தென்மாகாணத்தின் பிரதான மாவட்டங்களில் ஒன்றாக விளங்கும் மாத்தறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் அக்குரஸ்ஸ, மாலிம்பட, திகொட, கம்புறுப்பிட்டிய, திக்வெல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் பிரதேச மக்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர். சில பிரதேசங்களில் பாடசாலைகள் உள்ளிட்ட பொதுக்கட்டடங்களுக்குள் மாத்திரமல்லாமல் குடியிருப்புகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளது. அதனால் சொத்துகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வெள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு மாத்தறை மாவட்டத்தின் சில பாடசாலைகளுக்கு கடந்த 5ஆம், 6 ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்பட்டிருந்த அதேநேரம், தற்போதைய வெள்ள நிலையைக் கருத்தில் கொண்டு இன்றும் நாளையும் மாத்தறை மற்றும் காலி மாவட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாத்தறை மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதோடு, அந்த மக்களுக்கு அவசியமான சமைத்த உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய வசதிகளை குறைவின்றி வழங்குமாறும் அதற்காக முப்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறும், எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும் பட்சத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தலும் வழங்கியுள்ளார்.

அந்த வகையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மாத்தறை மாவட்ட மக்களுக்கென மாலிம்பட, அக்குரஸ்ஸ, கம்புறுப்பிட்டிய, திஹகொட ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கும் நிவாரண உணவு தயார்படுத்தல் நிலையங்கள் ஊடான சமைத்த உணவு நிவாரணம் இராணுவத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

அதேநேரம் இவ்வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கென விசேட நிவாரணத் திட்டமொன்றையும் இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

இவை இவ்வாறிருக்க, வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்கவும் அவர்களுக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவுமென 600 இராணுவ வீரர்கள் மாத்தறை மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நில்வளா கங்கையின் பெருக்கெடுப்பினால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு நிலை மாத்தறை மாவட்ட மக்களின் இயல்புநிலையைப் பெரிதும் பாதித்திருப்பது தொடர்பில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தரவுகளின் படி, 2,114 குடும்பங்களைச் சேர்ந்த 8,597 பேர் நேற்றுக்காலை வரையும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு அதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேநேரம் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளநீர் வழிந்தோடுவதற்கான நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

நில்வளா கங்கையின் பெருக்கெடுப்பால் மாத்தறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள போதிலும், ஏனைய பிரதேசங்கள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவையும் நிலவவே செய்கிறது. தென்மேல் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி தீவிரமடைந்திருக்கும் சூழலில், நீர் மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்கள் பலவற்றின் நீர்மட்டங்கள் உயர்ந்து வருவதோடு களுகங்கை, அத்தனுகலு ஓயா போன்றவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதையும் நீர்ப்பாசன திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. தற்போதைய மழைவீழ்ச்சி அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களமும் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே தற்போதைய சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதன் ஊடாக அனர்த்தங்களின் விளைவான பாதிப்புக்களையும் சேதங்களையும் குறைத்து தவிர்த்துக்கொள்ள முடியும். அதுவே துறைசார் உத்தியோகத்தர்களின் கருத்தும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk



# ஏழை, பணக்காரர் அனைவரினதும் பயணத்துக்கான நண்பன் லுமாலா

## இலங்கையின் பாரிய சைக்கிள் உற்பத்தி நிறுவனம் கடந்து வந்த கரடுமுரடான பாதை!

**உளக்கத்துடன் முன்னேறுபவர்களின் வாழ்க்கையின் ஆரம்பம் கசப்பானது. ஜப்பானிய மொழியில் 'சக்தி' என்னும் அர்த்தத்தைத் தருகின்ற 'லுமாலா' என்னும் பெயரில் இந்நாட்டில் பிரபல்யமான சைக்கிள் நிறுவனம் இயங்கி வருகின்றது.**

அந்நிறுவனம் வார்த்தைகளால் கூற முடியாத அளவு அனைத்து சவால்களையும் வெற்றி கொண்டு முன்னணிக்கு வந்துள்ளது. லுமாலா என்னும் பெயர் இந்நாட்டின் சைக்கிள் துறையில் முதலிடத்தை அடைய எடுத்த முயற்சியானது அவ்வளவு இலகுவான ஒன்றல்ல.

லுமாலா சைக்கிள் தொழிற்சாலை இன்று 3 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள பாரிய கட்டட வளாகமாகும். 38 வருட காலமாக மூன்று பரம்பரையாக இலங்கையின் சைக்கிள் உற்பத்தி முதன்மை நிறுவனம் என்பது இரகசியமான விடயமல்ல. இதுவரையில் பயணித்த பாதையின் சிரமமான முயற்சியின் பலனை இந்நிறுவனம் தற்போது உறுதி செய்துள்ளமைக்கு பல சாட்சிகள் உள்ளன.

சிற்றி சைக்கிள் ஸ்டோர்ஸ் (City cycle Stores) என்னும் பெயரில் பாணந்துறை, சரிக்காலமுல்ல, ஹேனாமுல்ல, காலி வீதி இலக்கம் 119 என்னும் இடத்திலேயே இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. ஆர். எம் நஜிமுதீன் என்னும் வர்த்தகரால் 1953 இல் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் வர்த்தக நிலையமாக இது ஆரம்பிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு லுமாலா வர்த்தகப் பெயரின் கீழ் ஜப்பானின் பிரபல சைக்கிள் உற்பத்தி நிறுவன ஒப்பந்தத்துடன் அதே வர்த்தகப் பெயருடன் இந்நாட்டு வர்த்தக சந்தைக்கு லுமாலா சைக்கிள்கள் இறக்குமதி செய்து விற்கப்பட்டன. பின்னர் ஜப்பானின் லுமாலா சைக்கிள் உற்பத்தித் தொழிற்சாலை மூடப்பட்ட பின்னர், 1985 ஆம் ஆண்டு அந்த தொழிற்சாலையின் அனைத்து இயந்திர உபகரணங்களோடு 'லுமாலா' என்னும் பெயரையும் தற்போதைய தலைவர் எம். எம். மிஃப்லால் விலைக்கு வாங்கினார்.

லுமாலா என்னும் ஜப்பான் வர்த்தக நாமத்தின் கீழ் ஒரு கட்டடத்தில் மூன்று ஊழியர்களுடன் இந்த வர்த்தகம் தற்போதைய தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வர்த்தகம் இலங்கையால் கையகப்படுத்தப்பட்ட பின்னர் அதனை தற்போதைய நிலைமைக்கு கொண்டு வந்த ஆரம்பகர்த்தா இவராவார்.



முகாமைத்துவப் பணிப்பாளர் ஆசிம் மிப்லால்

அதன் பின்னர் மிகவும் குறுகிய காலத்தில் 2010 அளவில் தேசிய வர்த்தக சந்தையை ஆக்கிரமித்து வெளிநாட்டு சந்தையையும் வெற்றிகொள்ள முடிந்தது. அவ்வேளையில் 1500 ஊழியர்கள் பணிபுரிந்ததோடு நாளொன்றுக்கு 2000 சைக்கிள்கள் வரை உற்பத்தி செய்யப்பட்டன. அதன் பின்னர் ஒரு தசாப்த காலத்திலேயே இலங்கையின் ஏற்றுமதித்துறையில் முக்கிய இடத்தை அடைந்ததோடு, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதில் முதலிடத்தை வகித்தனர். தற்போது லுமாலா குடும்பத்தின் இன்னுமொரு உற்பத்தியாக 'லைக்கன்' என்னும் பெயரில் மின்சார சைக்கிள்கள் உள்ளிட்ட சைக்கிள் உற்பத்தி மற்றும் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாக தேசிய பொருளாதாரத்துக்கு அளிக்கும் பங்களிப்பை நாம் கௌரவிக்க வேண்டும்.

லுமாலா நிறுவனத்தால் 1997 இல் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு சைக்கிள் ஏற்றுமதியை ஆரம்பித்து 1999 இல் ஐரோப்பிய வர்த்தக சந்தையையும் வெற்றிகொண்டது. 2005 ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்கும் பின்னர் பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளுக்கும் லுமாலா சைக்கிள்களை ஏற்றுமதி செய்கிறது.

நாட்டில் பொருளாதார வீழ்ச்சியின் பின்னர் மூலப்பொருட்களைப்பெற்றுக்கொள்ளமுடியாதநிலைமையும் மற்றும் வரிவிதிப்பால் சைக்கிள் உற்பத்தி செய்வதில் பெரும் செலவும் ஏற்பட்டன. நாளாந்தம் 2000 சைக்கிள் வரை உற்பத்தி செய்யக்கூடிய லுமாலா தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேசிய பொருளாதாரம் மேம்படும் என்பதோடு, இந்த பாரிய வர்த்தகம் எமது ஏற்றுமதி வருமானத்துக்கு பெரும் பங்களிப்பு வழங்கும் என்பதும் உறுதி.

தேசிய உற்பத்தியான லுமாலா தொடர்பாக இதற்கு முன்னர் அரசாங்கத்தின் ஆதரவு கிடைத்திருந்தால் தங்களுடைய உற்பத்தியின் கொள்ளளவை இதைவிட அதிகரித்திருக்கலாம் என லுமாலா நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமை நிறைவேற்று அதிகாரி தாரிக் மிப்லால் தெரிவித்தார். தற்போது போட்டி நிறைந்த வர்த்தகச் சந்தையில் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்களை விநியோகிப்பது மற்றும் மூலப்பொருட்களை உற்பத்தி செய்து சைக்கிள்களை தயாரிப்பதும் லுமாலா போன்ற சைக்கிள் உற்பத்தியாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. தரத்தில் உயர்வான சைக்கிள்களை உற்பத்தி செய்வதாயின், இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்களை விட அதிக அளவு செலவிட வேண்டி உள்ளது.

அதனால் தேசிய கைத்தொழிலான அவர்களின் சைக்கிள் கைத்தொழில் தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக கழிவு மரத்தூள் மற்றும் அதற்கான வெப்பத்தைப் பெற நீரையும் மாற்றுவழிகளாக பயன்படுத்துகிறது.

புதைபடிவ எரிபொருளுக்குப் பதிலாக மின்சாரத்தைப் பயன்படுத்தி குறைந்த செலவின் கீழ் போக்குவரத்து வசதியை வழங்கக் கூடியவாறு மின்சார சைக்கிள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது காணப்படும் நிதிப்பிரச்சினையின் மத்தியில் பயனுள்ள மாற்றுத் திட்டமாக இதனை பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



டயர் தயாரிப்புப் பிரிவு

தேசிய மற்றும் வெளிநாட்டு வர்த்தக சந்தையை நோக்கமாகக் கொண்டு வருடத்திற்கு 5 இலட்சம் யூனிட்டுக்கும் அதிகமான சைக்கிள்களை உற்பத்தி செய்யும் மின்சார சைக்கிள்கள் (ebike) லைக்கன் என்னும் வர்த்தகப் பெயரின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த சைக்கிள்களுக்காக பெருமளவு வெளிநாட்டு சந்தை கேள்வி உள்ளதாக முகாமைத்துவம் குறிப்பிடுகின்றது. இந்த சைக்கிள்களுக்கு தேசிய சந்தையை விரிவுபடுத்துவதற்காக அரச நிறுவன ஊழியர்களுக்கு மற்றும் வேறு சேவைகளை வழங்குபவர்களுக்கு ஏதேனும் சலுகை முறையின் கீழ் இந்த சைக்கிள்களை அறிமுகம் செய்வதற்கு அரசு தலையிட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.



பணிப்பாளர், தலைமை நிறைவேற்று அதிகாரி தாரிக் மிப்லால்

நிறுவனத்தின் பல பிரிவுகளின் பங்களிப்புடன் முற்றிலுமாக உள்ளூரில் இந்த சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு கிலோமீட்டருக்கு ஒரு ரூபாவுக்கும் குறைந்தளவே செலவாகிறது. ஒரு தடவை மின்னேற்றினால் 100 கிலோமீட்டர் வரை பயணம் செய்யக்கூடிய லைக்கன் மின்சார சைக்கிள்கள் உள்ளிட்ட பலமாதிரியான சைக்கிள்கள் லுமாலா நிறுவனத்தால் எதிர்காலத்தில் உற்பத்தி செய்யப்படவுள்ளன.



சைக்கிள் சட்டம் தயாரித்தல்

இந்தத் தொழில்நுட்பத்தின் கீழ் சாதாரண மின்சார சைக்கிள்கள், உல்லாசப் பயணிகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட இரட்டை ஆசனங்கள் கொண்ட மின்சார சைக்கிள்கள், கழிவுப் பொருட்களான பிளாஸ்டிக் போத்தல் உள்ளிட்ட இலகு கழிவுகளை சேகரிக்க விசேட மின்சார சைக்கிள்கள், மின்சாரத்தால் செயல்படுத்தப்படும் சக்கர நாற்காலிகள், மக்கள் போக்குவரத்துக்கான ஆசனங்களுடன் கூடிய மின்சார சைக்கிள்கள், ஐஸ்கிரீம் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய நாடு பூராவும் பிரபலமான உணவு உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பவர்களுக்கான மின்சார சைக்கிள்கள், நடமாடும் விற்பனை நடவடிக்கைகளுக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சார சைக்கிள்கள் உள்ளிட்ட பல மாதிரிகளை அறிமுகப்படுத்தி உள்ளதோடு கேள்விக்கு அமைய பாரியளவில் அவற்றை உற்பத்தி செய்யக்கூடிய திறமை நிறுவனத்திடம் உள்ளது.

இந்த சைக்கிள்களை அரசு விசேட கேள்வியின் கீழ் அரசு அதிகாரிகள், பிரதேச ஊடகவியலாளர்கள், நடமாடும் வர்த்தகர்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தால் அது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு மேலும் உதவியாக இருக்கும். இந்நாட்டில் போன்று ஐரோப்பா, இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் இதற்கு பெரும் கிராக்கி உள்ளதாக நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் ரஞ்சித் சிறிவர்தன தெரிவித்தார்.

இந்நிறுவனத்தில் 1500 இற்கும் அதிகமான ஊழியர்கள் பணிபுரிவதோடு அவர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி உள்ளிட்ட வரப்பிரசாதங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது இந்நாட்டில் போட்டியாக குறைந்த விலையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்கள் அவர்களுக்கு அச்சுறுத்தலாகும். லுமாலா தொழிற்சாலையில் நூற்றுக்கு நூறு வீதம் உள்ளூர் உற்பத்தி என்பதால் செலவு அதிகம். விற்பனை செய்யும் போது வரி அறவிடுவதால் இந்நிறுவனத்தை நடத்த பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என பொதுமுகாமையாளர் தெரிவித்தார்

சில பிரிவுகளுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வது இலாபம் என்பதால் தற்போது இங்கு பணிபுரியர்களின் எண்ணிக்கையை 500 ஆக குறைக்க வேண்டிய துயரமான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிறுவனத்தின் உற்பத்தி அளவு அதிகரித்த மட்டத்தில் காணப்பட்டால் வர்த்தக சந்தைக்கு வழங்கும் போது இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்களை விட அதிக செலவை அவர்கள் செய்ய வேண்டியுள்ளது.

நிறுவனத்தின் வர்த்தக முகாமையாளர் நிலந்த சட்டன் ஆராச்சி இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் "இவ்வாறான தேசிய உற்பத்திகள் தொடர்பில் மக்களுக்கு விரிவான அறிவுறுத்தல் அத்தியாவசியமாகும். கைத்தொழிலாக இவ்வாறான நிறுவனம் மேற்கொள்ளும் சேவை தற்போது உள்ளதைவிட அதிகமாக சமூகத்தில் பரப்பப்பட வேண்டும். பாரம்பரிய சைக்கிள்களுக்கு பதிலாக பலவகையான அதாவது சிறு பிள்ளைகளுக்கு, பல துறைகளைச் சேர்ந்த நடமாடும் விற்பனையாளர்களுக்கு இலகுவான முறையிலான சைக்கிள்கள் விஷேடமாக லைக்கன் என்னும் பெயரில் மின்சார சைக்கிள்கள் உள்ளிட்ட பல உற்பத்திகள் தற்போது சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார்.

விசேடமாக மின்சார சைக்கிள்களை பயன்படுத்துவதன் மூலம் உடல் ரீதியான நன்மையும், பாரிய சேமிப்பும் கிடைக்கும். நாள்தோறும் பயன்படுத்துபவருக்கு ஒரு மாதத்திற்கு 8000 ரூபா வரை எரிபொருள் சேமிப்பு இதன் மூலம் கிடைக்கும்,

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் லுமாலா சைக்கிள்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்களை விட லுமாலா சைக்கிள் உயர்தரத்தில் காணப்படுகின்றன. லுமாலா என்பது நூற்றுக்கு நூறு வீதம் இலங்கையிலேயே தயாரிக்கப்படும் சைக்கிளாகும் இலங்கையில் தயாரிப்பது மாத்திரம் அல்ல ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்த வர்த்தகம் வெளிநாட்டிலிருந்து சைக்கிள்களை இறக்குமதி செய்து விற்பதன் மூலமே ஆரம்பிக்கப்பட்டது. லுமாலா உற்பத்தி ஜப்பானில் நிறுத்தப்பட்டது. அதனையே விலைக்கு வாங்கி இங்கு அந்நிறுவனம் நிறுவப்பட்டது. சைக்கிள் உற்பத்தி கைத்தொழில் இலங்கைக்கு போட்டி மிகுந்த ஒரு கைத்தொழிலாகும். அந்தப் போட்டியான துறைக்கு முறையான நடவடிக்கைகள் அவசியமாகும் என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தாரிக் தெரிவித்தார்.

இலங்கையில் சைக்கிள் உற்பத்தி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள லுமாலா அரசாங்கத்தால் கிடைக்கும் பாதுகாப்பின் கீழ் நடத்தப்படும் ஒன்றல்ல என்பது மிகவும் தெளிவானது. ஆனால் ஏனைய தேசிய கைத்தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை இந்த கைத்தொழிலும் முகம்கொடுக்கிறது. இவ்வாறான தேசிய கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக விசேட திட்டமொன்று அரசால் தயாரிக்கப்பட வேண்டியது காலத்துக்கேற்ற தேவையாகும். எவ்வளவுதான் இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்கள் சந்தைக்கு வந்தாலும் நிச்சயமாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் போட்டித் தன்மையை தொடர்ந்தும் பேணக் கூடிய தரச் சான்றிதழை பெற்றுக்கொடுக்க லுமாலாவினால் முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

சுபத்ரா தேசப்பிரிய...
தமிழில்: வீ.ஆர்.வயலட்



லுமாலா சைக்கிள்



வர்ணம் பூசுதல்

# மானுடவியல்

## சுந்தரர்



136

சுந்தரமூர்த்தி நாயானார் ஆதி சைவர் எனும் குலத்தினைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் நம்பியாரூரன் என்பதாகும். நம்பியாரூரன் என்பதை ஆரூரன் என்று சுருக்கி அழைப்பர். இவருடைய அழகினைக் கண்டு சிவபெருமானே சுந்தரர் என்று அழைத்தமையால், அப்பெயரிலேயே அறியப்படுகிறார்.

சுந்தரர் சிறுவயதில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது, திருமுனைப்பாடி அரசர் நரசிங்கமுனையரையர் கண்டார். சிறுவன் சுந்தரனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று இளவரசனைப் போல அனைத்துக் கலைகளையும் கற்றுத் தந்தார்.

மணப்பருவம் அடைந்தபோது சுந்தரருக்குப் புத்தூரில் உள்ள சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. மணநாளன்று முதியவர் ஒருவர் வடிவில் அங்கு வந்த இறைவன், சுந்தரருடைய பாட்டனார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட ஓர் ஓலையைக் காட்டி, சுந்தரரும், அவர் வழித்தோன்றல்களும் தனக்கு அடிமை என்றார். திருமணம் தடைப்பட, சுந்தரரை அழைத்துக்கொண்டு கோயிலுள் நுழைந்த வயோதிகர் திடீரென மறைந்தார். இறைவனே வந்து தன்னைத் தடுத்தாட்கொண்டதை உணர்ந்த சுந்தரர், பித்தா பிறை சூடி.... என்ற தமது முதல் தேவாரப் பதிகத்தைப் பாடித் துதித்தார். பாடல்களின் மூலமாக இறைவனைத் தம்முடைய நண்பராக்கிக் கொண்டார். சிவத் தலங்கள் தோறும் சென்று, தேவாரப் பதிகங்கள் பாடி இறைவனைப் பணிந்தார். இறைவன் பால் இவர் கொண்டிருந்த பக்தி சக மார்க்கம் என்று சொல்லப்படுகின்ற தோழமை வழியைச் சார்ந்தது. இறைவனைத் தமது தோழனாகக் கருதித் தமக்குத் தேவையானவற்றை எல்லாம் கேட்டுப் பெற்றுக்கொண்டார். நீள நினைந்தடியேன்.... என்று தொடங்கும் அவர் பாடிய தேவாரப் பதிகம் மூலம், குண்டலூரில் தான்பெற்ற நெல்லைத் தனது ஊர் கொண்டு சேர்க்க இறைவனிடம் உதவி கேட்பதைக் காணலாம்.

சுந்தரமூர்த்தி நாயனார் என்பவர் சைவசமயத்தில் போற்றப்படும் சமயக்குரவர் நால்வரில் ஒருவரும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் ஆவார். இவர் புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்துகொள்ள இருந்தபோது, சிவபெருமான் கிழவனாகச் சென்று தடுத்தார். பின்பு, சுந்தரரின் பிறவி நோக்கம், சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவது எனப் புரிய வைத்தார். இதனைத் தடுத்தாட்கொள்ளுதல் எனச் சைவர்கள் கூறுகிறார்கள். இவர், இறைவன் மீது, பல தலங்களுக்குச் சென்று பாடியுள்ளார். இப்பாடல்களைத் திருப்பாட்டு என்று அழைக்கின்றனர். திருப்பாட்டினைச் சுந்தரர் தேவாரம் என்றும் அழைப்பர்.




திருவாரூரில் பரவையார் என்றொரு அழகிய பெண் இருந்தார்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
 கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# நவராத்திரி குறித்த புராணக் கதை

முன்பு வரமுனி என்ற பெரும் சக்தி வாய்ந்த முனிவர் ஒருவர் இருந்தார். எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியவர் வரமுனி. இவருக்கு நிகர் இவர்தான். தனக்கு இணை யாரும்இல்லை என்ற தலைக்கனம் இவருக்கு ஏற்பட்டது. பதவியும், தலைக்கனமும் ஏற்பட்டால் மற்றவர்களை துச்சமாக மதிக்கும் எண்ணமும் வரும்தானே? வரமுனிக்கும் அது வந்தது. இவர் தலைக்கனம் காரணமாக அகத்தியர் போன்ற பெரும் முனிவர்களிடமும் மகிஷம் (எருமை) போல் உருவம் கொண்டு அவமரியாதையாகநடந்து கொண்டார். இதனால் கோபம் கொண்ட முனிவர்கள் அனைவரும் எருமையாகபோவாய் என்று அவருக்கு சாபமிட்டனர்.

ரம்பன் என்ற அசுரன் கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தான். அவன் தவத்தை மெச்சிஅவன் முன் தோன்றினார் அக்னி பகவான். அவன் தனக்கு சர்வ வல்லமை பொருந்தியமகன் வேண்டும் என வேண்டினான். அவன் வேண்டியதை அருளிய அக்னி தேவன், ரம்பன்!, நீ கேட்ட வரத்தை அளித்தேன். நீ எந்த பெண்ணை கொண்டு ஆசை கொள்கிறாயோ அவள் மூலம் உனக்கு மகன்பிறப்பான் என்று கூறி மறைந்தார். மனம் முழுக்க உற்சாகத்துடன் வந்த ரம்பன் முதலில் கண்டது காட்டெருமையை.அவனது அசுர புத்தி வேலை செய்தது. காட்டெருமை மேல் காதல் கொண்டான். தானும்காட்டெருமையாக உருமாறினான். முனிவர்களால் எருமையாய் பிறப்பாய் என்றுசாபம் பெற்ற வரமுனி, அசுரனின் வாரிசாக மகிஷாசுரனாக பிறந்தான்.

எனக்கு தேவர்கள், அசுரர்கள், மானிடர்களால் மரணம் ஏற்படக்கூடாது. கன்னிப்பெண்ணால் தான் மரணம் ஏற்பட வேண்டும் என்று வரம் கேட்டான். அவன் கேட்டவரத்தை அருளினார் பிரம்ம தேவன்.அங்கு தொடங்கியது பிரச்சனை. மகிஷாசுரனின் அராஜகம் அதிகமாகியது. மகாவிஷ்ணுவை தஞ்சமடைந்தனர். தேவர்கள். மகிஷாசுரனுக்கு மரணம் பெண்ணால்தான். அவனை சம்ஹாரம் செய்யதகுந்தவள் மகாசத்தி மட்டும்தான் என்று கூறினார் மகாவிஷ்ணு. மும்மூர்த்திகளும் தேவர்களும் ஒன்று கூடி பிரார்த்தனை செய்ததும் ஸத்வ, ரஜஸ், தமஸ்என்ற மூன்று குணங்களையும் ஒன்றாக பெற்ற மகாலட்சுமியாய் தோன்றினாள்அம்பாள். தங்களை காக்க வந்த தேவிக்கு தேவர்கள் படைக்கலங்களைப் படைத்தனர். சிவபெருமான் சூலம் தந்தார். அக்னி சக்தி தந்தார். வாயு பகவான் வில்லும்,அம்பறாத்துணியும் கொடுத்தார். தேவி மகிஷனை சம்ஹாரம் புரிய சர்வலங்காரபூஷிதையாய் புறப்பட்டாள்.




அம்பாளுடன் கடும் போர் புரிந்தான் மகிஷாசுரன். கடும் போர் முடிவுக்கு வந்தது.அநீதி அழிக்கப்பட்டது. அழிந்தான் மகிஷாசுரன். அம்பாள் மகிஷாசுரனை சம்ஹாரம் செய்தது அஷ்டமி தினத்தன்று. தேவர்கள்அம்மனை வணங்கி வழிபட்டது அடுத்த நாளான நவமி தினத்தன்று. தேவிமணித்வீபம் (மூலஸ்தானம்) சென்றது அதற்கு அடுத்த நாளான தசமி தினத்தன்று. இந்த நாட்கள்தான் நவராத்திரியின் கடைசி 3 நாட்களாகக் கொண்டாடப்படுகிறது.

## சைவ மஞ்சரி



வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த "வேள்விப் பொங்கல் "உற்சவம் வெள்ளிக்கிழமை (6) மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பத்து நாட்கள் கும்பம் பாலித்தல் நடைபெற்று பூஜைகள் இடம்பெற்றதுடன், பொங்கலில் பலர் கலந்துகொண்டனர். பின்னர் கடல் அன்னைக்கு அபிஷேகம் நடைபெற்றதுடன், கச்சான் காற்று நிறைவடையும் தருவாயில் வாடைக்காற்று ஆரம்பமாகும். இதன் பிற்பாடு கரைவலை மீனவர்கள் தமது தொழிலை தொடங்கி ஆரம்பிப்பார்கள். பல மீன்பிடி வள்ளங்கள் தொழிலுக்காக தயார்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டன. (உடப்பு குறூப் நிருபர்)

# அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19875 வீட்டில் விளக்கேற்றும் போது சுவாமி படங்களுக்கு பூ கட்டாயம் போட வேண்டுமா?**

காலையில் விளக்கேற்றி பூ சாத்தி வழிபடவேண்டும். மாலையில் பூ கட்டாயமில்லை.

**19876 செவ்வாய், வெள்ளிக்கிழமையில் வீட்டில் ஒட்டடை அடிக்கக் கூடாதா ஏன்?**

செவ்வாயும், வெள்ளியும் பொருள் வாங்கிச் சேர்த்தால் வளரும். அதனால், இவ்விரு நாட்களிலும் வீட்டைத் துடைப்பதில்லை. முதல்நாளே ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தி விடுங்கள்.

**19877 கண்ணை மூடிக் கொண்டு கடவுளை வழிபடக்கூடாது என்கிறார்களே உண்மையா?**

கடவுளின் திருவுருவம் கண் முன்னே இருக்கும்போது கண்ணாரக் கண்டு வழிபட வேண்டும். திருவுருவம் இல்லாத இடத்தில் வழிபட வேண்டிய காலத்தில், கண்ணை மூடி மனதில் கடவுளின் உருவத்தை நிலை நிறுத்தி வழிபாடு செய்யலாம்.

**திருமணஞ்சேரியில் வேண்டிக்கொண்ட பிரார்த்தனை மாலை தொலைந்துவிட்டது. மீண்டும் மாலை செலுத்த விரும்புகிறேன். பரிகாரம் என்ன?**

அறியாமல் செய்த தவறு தானே! இதற்காகக் குழம்பிக் கொள்ள வேண்டாம். மீண்டும் திருமணஞ்சேரி சென்று புதுமாலை வாங்கி சேர்த்து விடுங்கள். தவறைப் பொறுக்குமாறு கல்யாணசுந்தர சுவாமியிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

**சஞ்சீவிமலையைத் தூக்கி வரும் அனுமனை வீட்டில் வைத்து வழிபடக்கூடாது என்கிறார்களே, ஏன்?**

சஞ்சீவி என்பது உயிர் காக்கும் மூலிகை. இந்த அனுமனை வழிபட்டால் கவலை நம்மை தீண்டாது. இவரை வழிபட நோயில்லாத நல்வாழ்வு உண்டாகும்.

**கனவில் பாம்பு அடிக்கடி வருகிறது. அதைத் தவிர்க்க ஏதாவது பரிகாரம் உண்டா?**

பொதுவாக கனவில் பாம்பு வந்தால் பணம் வரும் என்பார்கள். மற்றபடி பயப்பட ஏதுமில்லை. முருகனுக்கு அர்ச்சனை செய்து பயத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்.

**பூஜை, விரதம் போன்றவற்றை பெண்கள் மட்டுமே கடை பிடிக்க வேண்டுமா, ஆண்கள் கடைபிடிக்கக் கூடாதா?**

இவற்றில் ஆண், பெண் பாகுபாடு கிடையாது. வீடு, குழந்தைகள் நலன் விஷயங்களில் பெண்களே அதிகம் அக்கறை கொண்டவர்களாக இருப்பதால் பூஜை, விரதங்களில் ஈடுபாடு காட்டுகிறார்கள். மற்றபடி ஆண்கள் பூஜை, விரதம் போன்றவற்றைச் செய்யாமல் இல்லை.

**மாலை நேரத்தில் சாப்பிடக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வதன் காரணம் என்ன?**

சாப்பிடுவது, தூங்குவது, நகம் வெட்டுவது போன்றவை குறிப்பிட்ட நேரங்களில் தான் செய்ய வேண்டும். காலை சூரிய உதயம், மாலை சூரிய அஸ்தமனம் ஆகிய இரு வேளைகளும் சந்தியா காலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த இரு வேளைகளிலும் தெய்வ வழிபாட்டை தவிர மேற்படி விஷயங்களை செய்யக்கூடாது. மகாலட்சுமி நம் வீட்டிற்கு வரும் வேளையில் விளக்கேற்றி வரவேற்க வேண்டுமே தவிர மற்றதைச் செய்யக்கூடாது.

**திருஷ்டி கழிக்க ஏற்ற முறையும், அதற்கான நாளும் எது என்று சொல்லுங்கள்?**

சாம்பிராணி புகை போட்டும், தேங்காயில் சூடம் கொளுத்தி வைத்தும், மிளகாய் வத்தல், காலடி மண்ணைச் சுற்றி நெருப்பில் போட்டும் இப்படி ஏதாவது ஒன்றைச் செய்து திருஷ்டி கழிக்கலாம். ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஏற்ற நாட்கள்.


**கோயிலில் நவக்ரஹ வழிபாட்டை கடைசியாகத் தான் செய்ய வேண்டுமா?**

முதலில் பிரதான மூலவரை தரிசித்து வலம் வரவேண்டும். அடுத்து அம்பாள் மற்றும் பரிவாரங்களை தரிசித்து வலம் வரவேண்டும். மூன்றாவது நவக்ரஹம், சண்டிகேஸ்வரர், பைரவர் ஆகியோரை தரிசித்து வலம் வரவேண்டும்.

**சிவன் கோயிலில் சுவாமிக்கும் நந்திக்கும் இடையில் செல்லக்கூடாது என்பது ஏன்?**

நந்திதேவர் தமது மூச்சுக் காற்றின் வாயிலாக சுவாமிக்கு சாமரம் வீசி வழிபட்டுக் கொண்டே இருக்கிறார். அது தடைபடாமல் இருக்க நாம் இடையில் செல்லாமல் இருக்க வேண்டும். பொதுவாக சுவாமி நந்தி, கணவன் மனைவி, பெற்றோர் குழந்தை, குரு சிஷ்யன், பசு கன்று ஆகியோரது குறுக்கே செல்லக்கூடாது என்பது சாஸ்திர நியதி.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 57



உண்மையில் உயிருக்கு வடிவம் இல்லை. பரமாத்மாவே பல வடிவங்களில் உலவுகின்றார். உயிர் உணர்வு என்னும் கற்பனை, மாயையில் இருக்கும் வரை தனது சக்தி, சாமர்த்தியம் துச்சமாகத் தான் இருக்கும். கடவுள் மீது நாம் கொள்ளும் பக்தியினால் தான் எச்செயலும் பெருமை மிக்கதாக உணரப்படும் ஒரு புழு பரிணாம வளர்ச்சியடைந்து ஒரு வண்டாக மாறும் வரை பல தடைகளை, இடைஞ்சல்களை சந்திக்க வேண்டி இருக்கும். ஆரம்பத்தில் கடினமாகவும், இயலாது போல தோன்றினாலும் இறுதியில் வளர்ச்சி என்பதை அடைந்தே தீரும். ஆரம்பத்தில் அந்தப் புழுவானது சுயநலம். மோகம் போன்ற மாயவலையில் சிக்கிக் கொண்டிருக்கும்.

அந்த மாயவலையிலிருந்து விடுபட்ட பின் தான் அந்தப் புழு வண்டாக உருமாறும். அது போல் மனிதனும் தன் அஹம் பாவத்தை விட்டுவிட்டு சாத்திய வழியில் தொடர்ந்து பயணித்தால் கடவுளின் அனுக்கிரஹம் பெறலாம். ஆரம்பக் கட்டத்தில் குறுகிய எண்ணத்துடன் இருக்கும் மனம் அஹங்காரத்தை. அதனை விட்டுவிடும் போது மனம் விசாலமடைந்து சர்வ சக்தி படைத்தவனாக மனிதன் மாறி விடுகிறான். பின் மனிதன் தன்னுள் தெய்வீகத் தன்மையைக் காண்கிறான். உயிரணுக்கள் விஸ்தாரமடைந்து அஹம் ப்ரஹ்மா நானே கடவுள் என்ற நிலையில் சக்தி பெறுகிறான்.

உலகத்தில் சுகம், வளம் யாவற்றையும் வழங்கவல்ல இறைவன் மீது பக்திக் கொண்டு தெய்வீக வழி சென்று தெய்வீக ஆற்றல் பெறும் போது வாழ்க்கை வளமாகும் என்பது திண்ணமே.

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் உன்னை நீயே உணர்ந்து கொள். ஆத்மசக்தி அடையும் நேரம் வந்ததும், கடவுளை அறிவது எளிதாகி விடும். இறைவனை அடையும் நேரம் ஏற்படும். அதே ஆனந்தம் நம்பிக்கையுடன் ஒரு செயலில் இறங்கும் போதும் ஏற்படும்.

தன்னிடம் மறைந்துள்ள சக்தியை உணராமல் ஒருவன் சக்திமான் ஆக முடியாது. எவன் ஒருவன் தன்னை உணர்கிறானோ, தன் சக்தியை வெளிப்படும் முயற்சியில் தொடர்கிறானோ அவன். தான் நினைத்தப்படி அதுவாகவே மாறிவிடுவான். சித்திகளில் எல்லாம் மிக உயர்ந்தது தன்னை உணர்வதே ஆகும்.

லட்சத்தில் ஒரு சிலரே தன்னை உணர முற்படுவர். அவர்களில் ஒரு சிலரே தொடர் முயற்சியில் ஈடுபடுவர். அவர்களில் ஒரு சிலரே கடவுளை அடைவர் மனித உடலிருந்து பிறப் பெடுத்தவர்களில் ஒரு சிலரே ஆத்மாவை உணர்ந்துள்ளனர்.

மனிதன் உடலில் காமம், கோபம், மோகம், சந்தோஷம். தண்டனை. தயவு. தாட்சன்யம் ஆகிய அனைத்து உணர்வுகளும் உள்ளன. அவைகளே ஆனந்தத்திற்கு காரணமாகவும் அந்த ஆனந்தத்தை பெறுவதில் ஏற்படும் தடைகளாகவும் எதிரும் புதிருமாக விளங்குகின்றன. அனைவருக்கும் ஆனந்தம் அடிப்படை, ஆனந்தமே லட்சியம். லட்சியத்தை அடைவது என்பது ஆத்மாவிலேயே அடங்கியுள்ளது. எவன் ஒருவன் ஆத்மா வழி நடந்து தன் ஆத்மாவை பகுத்து அறிகிறானோ அவன் தான் நினைத்ததை நினைத்தப்படி அடைந்து விடுவான். பரமாத்மாவின் அம்சமே ஆத்மா. எனவே ஆத்ம ஞானம் (தன்னை அறிதல்) அடைந்தவனுக்கு கடவுளை அடைவது மிக எளிதாகி விடும்.



மட்டக்குளி கல்யாணி கங்காராம வீதியிலுள்ள ஆஞ்சநேயர் அறநெறி பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வும் ஆசிரியர் தின நிகழ்வும் அண்மையில் நடத்தப்பட்டன. கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ராஜு பாஸகரன், அறிவகம் கல்வி நிலைய அதிபர் சசான்கன் சர்மா, அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத் தலைவர் எஸ். விஜேராஜ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். தேவாரம், யோகாசனம், அறநெறி கீதம் என நிகழ்வுகள் யாவும் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டன. சிறுவர்களுக்கே உரிய சிறப்பான போட்டிகளை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் பொறுப்பாளர்களும் ஏற்பாடு செய்து இருந்தார்கள். பிரிந்தா, ரவிந்துனி, மதுர, செவ்மினி, பூஜா, கன்யா, நாதன், பிரியா, இந்திரா, தாரணி, தனு, ராணி, மாதிரன், தேவி பவானி, கமல் ராஜ் ஆகியோரின் பங்களிப்புடன் இந்நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

## தென்மாகாண பாடசாலை பரீட்சைகள் ஒத்திவைப்பு

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தென் மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் குழு கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

அத்துடன், இப் பாடசாலைகளுக்கான பரீட்சை திகதிகள் விரைவில் அறிவிக்கப்படுமெனவும் தென் மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

### 2023 ஆம் ஆண்டுக்கான...

புத்திஜீவிகளின் பங்கேற்பில் இம்மாநாடு ஆரம்பமாகிறது.

இதில், பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் பங்கேற்க உள்ளன.

### இஸ்ரேல் பலஸ்தீன்..

பொதுமக்கள் உயிரிழப்பைத் தடுக்க, சகல தரப்பினரும் அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் இலங்கை கேட்டுக்கொள்கிறது. 1967 எல்லைகளின் அடிப்படையில் அருகருகே வாழும் இரு நாடுகளின் சர்வதேச ரீதியில் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவுகோல்களுக்கு இணங்க, பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு ஆதரவளிக்க இலங்கை உறுதியாக உள்ளது.

அன்புக்குரியவர்களை இழந்து வாடும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல் அவிவ் மற்றும் ரமல்லாவிலுள்ள இலங்கை தூதரகங்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் இலங்கையருடன் தொடர்பிலும் உள்ளன.

### கட்அவுட், சுவரொட்டிகளில்...

கோஷங்கள் மற்றும் கட்அவுட் அரசியலுக்கு, தாம் எப்போதும் எதிரானவன் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, புதிய அரசியல் பயணத்திற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149வது ஆண்டு நிறைவு விழாவில் நேற்று (08) காலை கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் நேற்றும் இன்றும் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட ஜனாதிபதி, மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரிக்கு அருகில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பாரிய கட்அவுட்டை அகற்றுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

### பாராளுமன்றத் தேர்தல்...

இதன்படி, அரசிலமைப்பு திருத்தத்தை மேற்கொள்வதற்கு அரசு எதிர்பார்த்துள்ளதுடன், அமைச்சரவையின் அனுமதியை வழங்குமாறு நீதி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். தற்போதைய அரசமைப்பின்படி, 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 196 பேர் விகிதாசார அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எஞ்சியுள்ள 29 பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகள் பெற்ற வாக்குகளின் வீதத்துக்கு ஏற்ப அந்தந்த கட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### பதுளுஓயா ஆற்றில்....

வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் வீழ்ந்து பதுளு ஓயாவில் கவிழ்ந்துள்ளது.

நேற்று அதிகாலை 1.00 மணியளவில் இவ்விபத்து இடம் பெற்றது. வாகனம் நீரில் மிதந்து கொண்டிருந்த போது, உரிமையாளர் காரிலிருந்து இறங்கி நீந்தி உயிர் தப்பியுள்ளார்.

### எதிர்காலத்தில்...

தெரிவிக்கையில், "15 இலட்சம் அரசு ஊழியர்கள் உள்ளனர். நாட்டின் மக்கள் தொகை 21 மில்லியனாகும். மக்கள் தொகையில் சுமார் 12 பேருக்கு ஒரு அரசு ஊழியர் உள்ளனர். இது உலகின் மிக உயர்ந்த அரசு ஊழியர்களின் விகிதங்களில் ஒன்றாகும். இது பெரும் சுமையாக உள்ளதால் தொடர்ந்து அதனை மேற்கொள்ள முடியாது" என்றார்.

# கொழும்பில் பாதுகாப்பற்ற மரங்களை அகற்றும் பணி நேற்று முதல் ஆரம்பம்



கொழும்பு டுப்ளிகேஷன் வீதியில் பஸ் மீது பாரிய மரம் விழுந்து விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து கொழும்பு நகரின் வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள பாதுகாப்பற்ற மரங்களை கொழும்பு நகர சபை நேற்று (8) காலை முதல் அகற்றி வருகிறது. அதன்படி கொழும்பு மாநகர எல்லையில் பல வீதிகளில் சுமார் 100 வருடங்கள் பழமையான பல பெரிய மரங்கள் வெட்டி அகற்றப்பட்டதுடன் சில மரங்களின் பெரிய கிளைகள் வெட்டி அகற்றப்பட்டன.

**படங்கள் : சுலோச்சன கமகே**

### ஆப்கானில் பாரிய...

உயிரிழந்ததோடு. மேலும் 1000க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்நிலநடுக்கத்தால் ஜிந்தா ஜன் மற்றும் கோரியான் மாவட்டங்களில் 12 கிராமங்கள் முற்றிலும் அழிந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜிந்தா ஜன் மாவட்டத்தின் 03 கிராமங்களில் மட்டும் 15 பேர் உயிரிழந்து, 40 பேர் படுகாயமடைந்துள்ளனர். பரா மற்றும் பத்கிஸ் பகுதிகளில் சில வீடுகள் முற்றிலும் அழிந்து விட்டன. ஹெராத் பகுதியில் பல இடங்களில் கட்டடங்கள் குலுங்கியுள்ளன. சுவர்களிலும் விரிசல்கள் விழுந்துள்ளன. நிலநடுக்கம் காரணமாக உயரமான கட்டடங்களிலிருந்து ஏராளமானோர் வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. நேற்று 02ஆவது நாளாக மீட்புபணி தொடர்ந்து வரும் நிலையில், பலி எண்ணிக்கை மேலும் உயரலாமென அஞ்சப்படுகிறது. இதுவரை 2,000 பேர் பலியானதா தலிபான் அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. 1000க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்துள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தெரிகிறது.

### 10 மாவட்டங்களுக்கு...

ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட, மத்துகமை மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் காலி மாவட்டத்தின் யக்கமுல்ல, எல்பிட்டிய, நாகொட, இமதுவ உள்ளிட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கும், மாத்தறை மாவட்டத்தின் ஹக்மன, பிட்டபெத்தர மற்றும் அக்குரஸ்ஸ ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

### IORA 23 ஆவது... (03ஆம் பக்கத் தொடர்)

சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் 25ஆவது கூட்டம் (ஒக்டோபர் 910) நடைபெறும்.

1997 இல் நிறுவப்பட்ட இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கம், இந்து சமுத்திரத்தின் எல்லையிலுள்ள அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். அதன் உறுப்பினர்கள் ஆபிரிக்கா, மேற்கு ஆசியா, தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா வரை பரவியுள்ளனர்.

இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை 23 உறுப்பு நாடுகள் மற்றும் 11 உரையாடல் கூட்டாளர்கள் என்ற அளவில் விரிவடைந்துள்ளது. 2023 முதல் 2025 வரையான காலப்பகுதிக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கும்.

### நீதிபதி விடயத்தை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,"தற்போது முல்லைத்தீவு நீதிபதி அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியதான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதனை முன்னிறுத்தி போராட்டங்களும் இடம் பெற்று வருகின்றன.

நீதிபதி விடயத்தை பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை. நிறுத்திக் கொள்ளலாம் என்பதே எனது கருத்து.

ஏனெனில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது இன்று நேற்று இடம்பெறும் விடயமல்ல. இது சட்டத்துறை சார்ந்தவர்களுக்கு தெரியும்.

2004 ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் பாராளுமன்றம் சென்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றும் அங்கு உள்ளனர்.

அவர்கள், தாங்களாகவே கள்ள வாக்களித்ததாக கூறியவர்கள் இன்றும் பாராளுமன்றத்திலுள்ளனர்.இருந்தபோதும் இலங்கை சட்டம் அவர்களை ஒன்றும் செய்யவில்லை.

ஆகவே, இலங்கையில் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் ஆட்சி அதிகாரம் உள்ளவர்களை பாதுகாக்கின்றபோது, மக்களை கட்டுப்படுத்துவதற்கு புதுச் சட்டங்கள் தேவையில்லை.

இலங்கையின் தற்போதைய நிலையில் தேவையற்ற சட்டங்களான பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டம் என்பன தற்போதைய சூழ்நிலையில் தேவையற்ற ஒரு விடயம்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் ஊடக நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் என்பவற்றை சட்டமாக்கும் செயற்பாடுகள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன.

நாட்டுக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படுமானால் 24 மணி நேரத்துக்குள் பாராளுமன்றத்தை கூட்டி சட்டம் இயற்ற முடியும் என்றார்.

### மதுரங்குளி...

முகங்களை மறைத்து மிகவும் சாதாரணமாக வருகை தந்தமை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சீ.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

அங்கு வருகை தந்த கொள்ளையர், ஏ.ரி.எம். இயந்திரம் பழுது என்றும் அதனை திருத்தப்போவதாகவும் கூறி, எவ்விதமான பதற்றமுமின்றி, திறப்பு ஒன்றின் மூலம் ஏ.ரி.எம். இயந்திரத்தின் பின் கதவைத் திறந்து பணம் வைக்கப்பட்ட பாதுகாப்பு அறைக்குள்ளே சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து, இரகசிய இலக்கங்களை உட் செலுத்தி ஏ.டி.எம் இயந்திரத்தை திறந்த கொள்ளையர்கள் அந்த இயந்திரத்தில் இருந்த சுமார் ஒரு கோடிக்கு அதிகமான பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துணிகரமான கொள்ளைச் சம்பவத்தில் ஏ.ரி.எம். இயந்திரத்திரத்திற்கோ அல்லது பாதுகாப்பு அறையின் கதவுக்கோ எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஏ.ரி.எம். இயந்திரம் அமைந்துள்ள பகுதிக்கு அருகிலேயே எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ளது. பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெற்றிருந்த வேளையிலேயே, கொள்ளையர்கள் இந்த துணிகர சம்பவத்தை நடத்தியுள்ளனர்.மக்களுக்கும், பொலிஸாருக்கும் இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தனியார் வங்கியுடன் தொடர்புடைய ஒருசிலரின் உதவியுடன் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென தாம் சந்தேகிப்பதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

### பலத்த மழையால்...

அம்மாவட்டத்தில் 05 பேர் உயிரிழந்துள்ளது, 17 பேர் காயமடைந்துள்ளனர். களுத்துறை மாவட்டத்தின் 13 பிரதேச செயலகப் பிரிவுகளில் 865 குடும்பங்களில் 3203 பேர் பாதிக்கப்பட்டு, கம்பஹா மாவட்டத்தில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் 134 குடும்பங்களில் 593 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாத்தறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2, 114 குடும்பங்களைச் சேர்ந்த 8, 597 பேர் பாதிக்கப்பட்டு, மூவர் காயமடைந்துள்ளனர்.

காலி மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும், புத்தளம் மாவட்டத்தின் இரண்டு பிரிவிலே 52 குடும்பங்களைச் சேர்ந்த 193 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 204 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

### நாகபட்டிணம் காங்கேசன்துறை...

மூன்றரை மணி நேரத்தில் இது வந்தடையும். நபருக்கு 18 சதவீத ஜி.எஸ்.டி வரியுடன் (இந்திய ரூபா) 6,500 ரூபாய் டிக்கெட் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குளிரூட்டல் வசதியுடன் கொச்சினில் தயாரிக்கப்பட்ட "சிரியாபாணி" என்ற பெயரிடப்பட்ட கப்பல் 07 ஆம் திகதி நாகை துறைமுகத்தை வந்து சேர்ந்துள்ளது.நாகை துறைமுகத்திலிருந்து காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுவதாக இந்திய மத்திய அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து மத்திய அரசு வழங்கிய 03 கோடி கோடி நிதியில் நாகை துறைமுகத்தை ஆழப்படுத்தி, நவீனப்படுத்தும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டது. பின்னர் கடந்த மாதம் 20 ஆம் திகதிபொதுப்பணித்துறை அமைச்சர் துறைமுகத்தில் ஆய்வு மேற்கொண்டதை தொடர்ந்து குடியுரிமை, மருத்துவ பரிசோதனை, பயணிகள் கொண்டு வரும் உடமைகளை பாதுகாப்பாக வைப்பது மற்றும் ஆய்வு செய்வது என அனைத்துக்கும் தனித்தனியாக அறைகள் உருவாக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்றன.

நாகப்பட்டினத்திலிருந்து இலங்கை சென்று வர 06 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதால் பயணிகளுக்கான கட்டணம் 18 சதவீத ஜிஎஸ்டி வரியுடன் 6,500 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பயணிகள் தங்களுடன் 40 கிலோ எடையுள்ள பொருட்களை கொண்ட செல்ல அனுமதிக்கப்படுவர்.

"சிரியா பாணி" என்ற இக்கப்பலில் 150 பயணிகள் பயணிக்க முடியும். கப்பல் முழுவதும் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டுள்ளது. சேவைக்கான வெள்ளோட்டம் நேற்று 08 ஆம் திகதியும், இன்று 09 ஆம் திகதி நடைபெறுகிறது.

சோதனை ஓட்டத்தில் கப்பலில் பணியாற்றும் 14 ஊழியர்கள் மட்டும் பயணம் செய்ய உள்ளனர். இவர்கள்தான், ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூர், கோலாலம்பூருக்குச் சென்று வந்த STATE OF MADRAS, S.S.RAJULA★ மற்றும் M..V.சிதம்பரம் ஆகிய கப்பல்களின் இயக்கியிருந்தனர்.

கே.பி.வி. சேக் முஹம்மது ராவுத்தர் என்ற தனியார் நிறுவனம் பயணிகள் கப்பலை இயக்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

### கிழக்கை...

செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நிலாவெளி முதல் பானம வரையிலான விரிவான சுற்றுலாத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்று (08) காலை கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:

மட்டக்களப்பு ஒரு அதிர்ஷ்டமான மாவட்டம். சுமார் 150 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட இரண்டு பாடசாலைகள் இங்குள்ளன. நான் நேற்று புனித மைக்கல் கல்லூரியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். இன்று செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு வருகை தந்துள்ளேன்.

மறைந்த அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகன் இந்தப் பாடசாலையில் கற்றவர். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அமைச்சரவையில் நான் அவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன். இப்பாடசாலையில் செங்கலடி, கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகள் உயர்தரக் கல்வியைப் பெற முடிந்தது.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது அதனைப் புரிந்து கொள்ள முடியும். மேலும், சில மாணவர்கள் கணக்கியல் உள்ளிட்ட ஏனைய பாடநெறிகளை படிக்கின்றனர். மேலும், இந்த மாணவர்கள் தொழில்நுட்பத் துறையில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்தப் பாடசாலையில் சிறந்த தொழில்நுட்ப ஆய்வகம் இல்லை. எனவே, இப் பாடசாலைக்கு உயர்மட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். இந்த பாடசாலை முன்னேற்ற வேண்டும். இங்கு மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி நடனத்திலும் சிறந்து விளங்குகின்றனர்.

இன்று செங்கலடி பிரதேசம் அபிவிருத்தியடைந்துள்ளது. இப்பகுதிகள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவான அமைச்சர்களான .தேவநாயகன் மற்றும் ராஜதுரை ஆகியோரின் விருப்பமும் அதுவே. அந்த ஆசையை நிறைவேற்றுவோம் ..

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியினால் அபிவிருத்தியடைந்துள்ளது. ஆனால் பொருளாதாரம் இன்னும் வலுவாக இல்லை. அடுத்த 10 ஆண்டு திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டம் பொருளாதார ரீதியாக பலப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

மகாவலி திட்டத்தின் ஊடாக இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன திட்டமிட்டிருந்தார். ஆனால் யுத்தம் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை. தற்போது திருகோணமலை மாவட்டத்தை இந்தியாவுடன் இணைந்து பாரிய நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பியகமவில் 400 ஏக்கர் முதலீட்டு வலயம் உள்ளது. ஆனால் திருகோணமலை 1,000 ஏக்கர் முதலீட்டு வலயத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகம் முறையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதற்கான திட்டத்தை சுபானா ஜூரான் சிங்கப்பூர் நிறுவனம் தயாரித்துள்ளது. அதனை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.

அப்போது திருகோணமலை பாரிய நகரமாக உருவாகும். மேலும் இது பொருளாதார ரீதியாக வலுவான மையமாக மாறும். மறுபுறம், விவசாயத்தை மேம்படுத்த வேண்டும்.

மகாவலி திட்டத்தில் விடுபட்ட மகாவலி ஏ மற்றும் பீ வலயங்களை அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தை முன்னேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதியில் நவீன விவசாயத் துறையை உருவாக்க உத்தேசித்துள்ளோம். இந்த மாகாணம் தற்போது அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளது.புதிய பயிர்களை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப்பிக்காக புதிய கால்நடைகளை வழங்குவதன் மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு இலங்கையில் உள்ள அம்பேவெல போன்ற உள்நாட்டு நிறுவனங்களின் ஆதரவையும் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதரவையும் பெற எதிர்பார்க்கிறோம்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக நிலாவெளி முதல் பானம வரையிலான சுற்றுலா வலயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. காடு மற்றும் ஏரி பகுதிகள் சுற்றுலாத்துறைக்காக மேம்படுத்தப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 10 வருடங்களில் திருகோணமலை நகரின் அபிவிருத்தி, மகாவலி ஏ மற்றும் பீ பிரிவுகளின் அபிவிருத்தி மற்றும் விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் இந்த மாகாணங்களில் புதிய பொருளாதாரம் உருவாக்கப்படுகிறது. தற்போதைய பிரச்சினையான பால் பண்ணையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்..

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாளேந்திரன், செங்கலடி மத்திய மகா வித்தியாலய அதிபர் தேவதாசன் குகதாசன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இன்றைய பலன்கள்




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**




ராகு 12ம் ,கேது 6ம் இடத்திலும் உள்ளது. பாக்கிய குரு 5, 7, 9 ஆம் இடங்களை சுப பார்வையாகப் பார்வையிடுவது சிறப்பு. பிள்ளைகளின் மூலம் மன நிறைவு உண்டாகும். அவர்கள் சம்பந்தமான கவலை தீரும்.

**ரிஷபம்:**



ராகு 11ம் ,கேது 5ம் இடத்திலும் உள்ளது. 5 ஆம் இடம் வலுவாக இருக்கிறது. பிள்ளைகளால் ஏற்றமும் மகிழ்ச்சியும் உண்டு. புத்திக் கூர்மையுடன் செயலாற்றுவீர்கள்.

**மிதுனம்:**



ராகு 10ம் ,கேது 4ம் இடத்திலும் உள்ளது. கேந்திரத்தில் இராசி நாதன் ஆட்சி , உச்சம் பெற்று இருக்கிறார். சூரியனும் செவ்வாயும் இணைந்து இருக்கிறார்கள். உங்கள் திட்டங்கள் ஓரளவு நிறைவேறும். முக்கியஸ்தர்கள் நட்பு கிடைக்கும்.

**கடகம்:**



ராகு 9ம் ,கேது 3ம் இடத்திலும் உள்ளது. இராசியில் சுக்கிரன் இருக்கிறார். மற்றொரு சுப கிரகமான குரு உங்கள் தன குடும்ப இராசியைப் பார்வையிடுகிறார். எனவே, நிதிப் பிரச்சினைகள் இருக்காது.

**சிம்மம்:**




ராகு 8ம் ,கேது 2ம் இடத்திலும் உள்ளது. இராசிநாதன் 2 இல் இருக்க இரண்டு மற்றும் 11 க்குரிய புதன் வலுப்பெற்று இருக்கிறார். இந்த இணைப்பு நல்லது. குடும்ப அமைதி மற்றும் சுமுகமான சூழல் உங்களுக்கு உற்சாகத்தைத் தரும்.

**கன்னி:**




ராகு 7ம் ,கேது 1ம் இடத்திலும் உள்ளது. இராசி நாதன் ஆட்சி , உச்சம் பெறுவதே சிறப்பு. அந்த அமைப்பு மற்ற கிரக தோஷங்களையும், கிரக தோஷங்கள் தரும் எதிர்மறை விளைவுகள் மற்றும் பின்னடைவுகளையும் கட்டுப்படுத்தும்.

**துலாம்:**




ராகு 6ம் ,கேது 12ம் இடத்திலும் உள்ளது. இராசிநாதன் 10 இல் இருக்க 4, 5 க்குரிய சனியின் பார்வை பெறுவது சிறப்பு. இராசியை குரு பார்ப்பதும் சில தனித்துவமான நன்மைகளைத் தரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**




ராகு 5ம் ,கேது 11ம் இடத்திலும் உள்ளது. இராசி அதிபதியுடன் சூரியன் இணைவு பெற்று 5 ஆம் இடத்தைப் பார்ப்பது சிறப்பு. சில நல்ல சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு. குழந்தைகள் பற்றிய கவலை வேண்டாம்.

**தனுசு:**



ராகு 4ம் ,கேது 10ம் இடத்திலும் உள்ளது. பொதுவாகவே இராசிநாதன் ஆட்சியோ, உச்சமோ, கேந்திர திரிகோண சஞ்சாரங்களோ பெற்றிருந்தால் அல்லது பார்வை இணைப்பில் இருந்தால், நன்மைதான் ஏற்படும்.

**மகரம்:**



ராகு 3ம் ,கேது 9ம் இடத்திலும் உள்ளது. புதன் அமைப்பு நன்றாக இருக்கிறது. பாக்கியாதிபதி பாக்கியஸ்தானத்தில் ஆட்சி, உச்சம் பெறுவதும் உங்கள் தைரிய இராசியைப் பார்ப்பதும் சிறப்பு. பணச்சிக்கல்கள் இருக்காது.

**கும்பம்:**



ராகு 2ம் ,கேது 8ம் இடத்திலும் உள்ளது. அஷ்டமத்தில் புதன் மறைவது தவறல்ல. தவிர, அவர் 5க்கும் உரியவர். 8 இல் தனது வீட்டில் ஆட்சி உச்சம் பெறுவதால் மறைவு உங்களுக்குச் சாதகமாகவே இருக்கும்.

**மீனம்:**



ராகு 1ம் ,கேது 7ம் இடத்திலும் உள்ளது. 5 இல் சுக்கிரன், 2ல் இராசிநாதன் குரு என இரண்டு சுப கிரகங்கள் நன்றாக இருக்கின்றன. பணப் பற்றாக்குறை இருக்காது. கேட்ட இடத்தில் பணம் கிடைத்துவிடும்.

# ஸ்ரீலங்கா மலேசிய வர்த்தக சங்க விசேட கூட்டம் இன்று

## மலேசிய வெளிவிவகார அமைச்சர் விசேட உரை

**ருஸைக் பாரூக்**

ஸ்ரீலங்கா மலேசியா வர்த்தக கவுன்சில் ஏற்பாட்டில் இன்று (9) மாலை 6.00 மணிக்கு கொழும்பு, ஷங்ரில்லா ஹோட்டலில் நடைபெறவுள்ள முதலீட்டாளர்கள் கூட்டத்தில் இலங்கை வந்துள்ள மலேசியா வெளிவிவகார அமைச்சர் Dato Seri (Dr.) Zambry Abdul Kadir அவர்கள் விசேட உரை நிகழ்த்துவார். இந்நிகழ்வின் முக்கிய உரையை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி நிகழ்த்துவார்.

Dialog Axiata PLC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க மற்றும் எபிக் டெக்னாலஜி நிறைவேற்றுத் தலைவர் நயனா தெஹிகம ஆகியோர் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ள குழுக்கலந்துரையாடலில் உரையாற்றவுள்ளார்.

இலங்கைக்கும் மலேசியாவிற்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் பரஸ்பர வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குவதற்கும் வளர்ப்பதற்கும் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

## மதவாச்சி பகுதி விபத்தில் ஒருவர் பலி!

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கண்டி யாழ்ப்பாணம் ஏ 9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் (07) தெரிவித்தனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை இரவு மதவாச்சி பொலிஸ் பிரிவின் கண்டி யாழ்ப்பாணம் வீதியின் 151வது, 152வது மைல் கல் பகுதிக்குள் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் 35 க்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர் என்பது தெரியவந்துள்ளதுள்ளபோதிலும் இதுவரையில் இவர் அடையாளம் காணப்பட்டவில்லை. விபத்து இடம்பெற்றுள்ள இடத்தில் உயிரிழந்தவருடயது என சந்தேகிக்கப்படும் துவிச்சக்கரவண்டியொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா அமைப்பின் ஏற்பாட்டில் சீனன்கோட்டையில் மௌலிதுன் நபி தமாம் மஜ்லிஸ் வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இந்நிகழ்வில் உலமாக்கள் உட்பட இஹ்வான்கள் கலந்து சிறப்பித்ததை படத்தில் காணலாம். (படம்: பேருவளை குறூப் நிருபர்)

## கல்முனை கல்வி வலயத்திலுள்ள 72 நிலையங்களில் தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சை

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

கல்முனை கல்வி மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில் ஆகிய நான்கு கல்வி வலயங்களிலுள்ள மொத்தம் 72 நிலையங்களில் மாணவர்கள் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இம்மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கான இறுதி ஏற்பாடுகள் நிறைவுபெற்றுள்ளதாக, அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளரும், பிரதம பரீட்சை உத்தியோகத்தருமான ஏ.எம். ஹஸீன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 22 நிலையங்களிலும், கல்முனை கல்வி வலயத்தில் 26 நிலையங்களிலும், சம்மாந்துறை கல்வி வலயத்தில் 14 நிலையங்களிலும், திருக்கோவில் கல்வி வலயத்தில் 10 நிலையங்களிலும் பரீட்சை நடைபெறவுள்ளது. மொத்தம் 10 இணைப்பு நிலையங்கள் தொழிற்படவுள்ளன. தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை பிராந்திய இணைப்பு நிலையமாக அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகம் தொழிற்படவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கை பரீட்சைத் திணைக்களம் முன்கூட்டியே மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடத்தைப் போன்று, இம்முறையும் பரீட்சார்த்திகள் பகுதிII வினாப்பத்திரத்திற்கு முதலிலும், அதனைத் தொடர்ந்து பகுதி I வினாப்பத்திரத்திற்கும் விடையளிப்பர். பிரதிப் பரீட்சை ஆணையாளர் எஸ்.பிரகாசன் கலந்து கொண்ட பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணைப்பு அலுவலக உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள், இதர பரீட்சைக் கடமை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மாவனல்லை கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு நடத்திய ஆறு மாத தையல் பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் பதுரியா மத்திய கல்லூரியில் நடைபெற்றது. பொறுப்பாசிரியை ஜன் இஸ்ஸதீனின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாவனல்லை கல்வி வலயத்தில் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.


## பண்டுவஸ்நுவர பிரதேச சபை வரவு பட்ஜெட் அறிக்கையை ஆய்வு செய்தல் ஆண்டு 2024

பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை பரிசோதிப்பதற்காக பிரதேசசபை அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளதாக பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் அதிகாரப் பகுதிக்குட்பட்ட பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

**எச்.ஏ.ஜீ. நிஸ்ஸங்க**
**செயலாளர்**
**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**
**ஹெட்டபொல**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 ஒக்டோபர் 11ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 90,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124A122 | LKA18224D123 | LKA36424J116 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 45,000 | 25,000 | 20,000 | 90,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 ஒக்டோபர் 11
தீர்ப்பனவுத் திகதி : 2023 ஒக்டோபர் 13
வழங்கப்படும் திகதி : 2023 ஒக்டோபர் 13
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 ஒக்டோபர் 11, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**









## சியபத்த பினான்ஸ்
## பெறுமதிமிக்க ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 88 வாகனங்கள்

2023 அக்டோபர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப. 10.00க்கு

சியபத்த பினான்ஸ் வாகன கூடம், இல. **427,** வெண்டேசிவத்த, ஏதபெந்திவெவ, தமபுன்னை.

பரீட்சிப்பது அக்டோபர் 12, 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் ஏல விற்பனை இடத்தில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை

அழையுங்கள் : **0740054361** (கூடம்) / **0740479916** (சுரேஷ்)

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **MOTOR VAN** | | |
| 60-4XXX | TOYOTA,HIACE | 1983 |
| 57-6XXX | TOYOTA,LH113 HIACE | 1992 |
| 54-4XXX | TOYOTA,TOWN ACE | 1990 |
| **TRACTOR & MACHINERY** | | |
| | KOBELCO,SK 200 | 2005 |
| NC RF-5XXX | MASSEY FERGUSON,MF1552 | 2017 |
| NC RB-4XXX | MAHINDRA,575DI | 2009 |
| NC RA-8XXX | MAHINDRA,575DI | 2007 |
| NC RG-4XXX | MAHINDRA,YUVO 575DI 4WD | 2019 |
| | KOMATSU,PC 200-8N1 | 2013 |
| EP RF-4XXX | MAHINDRA,YUVO 575 DISPS | 2017 |
| NC RE-5XXX | MAHINDRA,575DI | 2016 |
| **MOTOR CAR & CAB** | | |
| CP PE-6XXX | MITSUBISHI,L200 WARRIOR | 2007 |
| WP-CAC-9XXX | TATA,INDICA-XETA GLX | 2014 |
| CP KD-2XXX | KIA,SPORTAGE 4X4 JEEP | 2006 |
| 18-0XXX | TOYOTA,L-EE96V-COROLLA | 1988 |
| 17-0XXX | TOYOTA,L-KE72V COROLLA | 1987 |
| CP KT-1XXX | MARUTI,SWIFT VXI | 2010 |
| NC CAL-5XXX | MICRO,PANDA LC 1.0 | 2015 |
| NC KD-2XXX | MARUTI,800 | 2006 |
| 18-7XXX | TOYOTA,CORONA | 1991 |
| NW JJ-5XXX | TATA,INDIGO GLX | 2004 |
| SG KI-6XXX | CHERY,QQ 0.8L AMT 2W | 2006 |
| SP KD-3XXX | NISSAN,MARCH | 2003 |
| SG KC-5XXX | HONDA,CITY | 2003 |
| 300-4XXX | FORD,LASER | 1997 |
| NW CAJ-7XXX | SUZUKI,ALTO LXI 800 | 2015 |
| NC CAI-0XXX | SUZUKI,ALTO 800 LXI | 2015 |
| NP KD-8XXX | TOYOTA,COROLLA | 2002 |
| CP GF-7XXX | NISSAN,SUNNY | 1998 |
| 13-9XXX | MITSUBISHI,LANCER | 1985 |
| 14-4XXX | MITSUBISHI,LANCER | 1986 |
| 302 - 0XXX | DAEWOO,NUBIRA | 1997 |
| 14--3XXX | NISSAN,SUNNY | 1986 |
| **MOTOR BIKE** | | |
| NW BDX-6XXX | HERO,DASH VX | 2016 |
| **MOTOR VAN & JEEP** | | |
| CP PR-2XXX | MAHINDRA,MAXXIMO | 2011 |
| NW PV-1XXX | DFSK,EQ1020DR | 2012 |
| CP-PV-9XXX | MICRO,LOADER | 2013 |
| WP DAH-5XXX | TATA,SUPER ACE TRUCK AC CAB & CHASSIS | 2019 |
| SG DAA-4XXX | MAHINDRA,MAXXIMO PLUS VX | 2015 |
| NP PS-5XXX | MAHINDRA,MAXXIMO | 2011 |
| WP-DAB-8XXX | TATA,SUPER ACE | 2015 |
| EP DAF-7XXX | TATA,XENON LIGHT TRUCK | 2017 |
| WP PC-9XXX | SUZUKI,EVERY | 2000 |
| NW PV-6XXX | FOTON,BJ1028V3JA2-1 | 2012 |
| WP PX-5XXX | CHANA,MICRO LOADER | 2013 |
| NC DAC-8XXX | MAHINDRA,MAXXIMO PLUS VX | 2016 |
| NC PX-5XXX | MAHINDRA,BMT PLUS VX | 2014 |
| CP LI-0XXX | ISUZU,PB-NKR81A | 2005 |
| NW LB-9XXX | NISSAN,U-CM89ASD | 1999 |
| NW LE-1XXX | TATA,ACE | 2007 |
| CP LI-6XXX | TATA,LPK 1615 | 2011 |
| CP LJ-0XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER 1613 | 2011 |
| WP LB-5XXX | TATA,LPT1615 | 2006 |
| SG GO-1XXX | HINO,RANGER | 1997 |
| SG LL-9XXX | MITSUBISHI,KC-FE538B CANTER | 1996 |
| CP LP-1XXX | ISUZU,TQG-NPR85AN ELF | 2012 |
| CP LH-3XXX | TATA,LPK 1615 | 2010 |
| NP LI-2XXX | TATA,LPK 1615 | 2011 |
| CP LI-1XXX | TATA,LPK1615 | 2011 |
| SG LA-7XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER | 2005 |
| NW HG-8XXX | TATA,LPK 1615 | 2003 |
| NW-LJ-1XXX | TATA LPK 1615 | 2011 |
| NP LH-7XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER | 2008 |
| SP JV-7XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER | 2005 |
| NW LD-5XXX | TATA,207DI | 2007 |
| **JCB BACKHOE LOADER** | | |
| CP ZA-9XXX | JCB,2CX | 1996 |
| NP ZA-3XXX | JCB,3CX BACKHOE LOADER | 2006 |
| WP ZA-6XXX | JCB,3CX | 1999 |
| **THREE WHEELER** | | |
| SG QO-6XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| SG QV-3XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |
| EP YB-8XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| CP AAA-5XXX | BAJAJ,RE 205 | 2012 |
| CP ABK-7XXX | BAJAJ,RE | 2016 |
| CP QS-2XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP QX-2XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| CP AAX-3XXX | BAJAJ,RE | 2015 |
| CP ABN-9XXX | BAJAJ,RE | 2016 |
| CP QU-8XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |
| CP QM-6XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| CP QP-7XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP QE-4XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| CP AAL-4XXX | BAJAJ,RE 205 | 2013 |
| CP QO-1XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| WP QX-8XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| SP QO-1XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| NW QV-1XXX | BAJAJ,4S | 2009 |
| NW YS-9XXX | BAJAJ,RE 205 | 2011 |
| NW AAX-9XXX | BAJAJ,RE | 2015 |
| NW QK-5XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| CP AAA-0XXX | BAJAJ,RE 205 | 2012 |
| CP QR-4XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP YP-7XXX | BAJAJ,RE 205 | 2011 |
| CP YK-7XXX | BAJAJ,RE 205 | 2011 |
| CP ABJ-6XXX | BAJAJ,RE | 2015 |
| CP YH-1XXX | BAJAJ,RE 205 | 2010 |
| NC QG-4XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| NC JY-6XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| SP JB-7XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2004 |
| WP-QM-3XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| CP YO-9XXX | BAJAJ,RE 205 | 2011 |
| SG AAJ-5XXX | BAJAJ,RE 205 | 2013 |
| EP AAO-5XXX | BAJAJ,RE | 2014 |
| NP ABC-6XXX | BAJAJ,RE | 2015 |
| CP ABA-4XXX | BAJAJ,RE | 2015 |
| NC QX-8XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| CP QE-6XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| CP YV-3XXX | BAJAJ,RE 205 | 2011 |
| CP QI-1XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| CP YP-8XXX | BAJAJ,RE 205 | 2011 |
| CP QM-3XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP QV-7XXX | BAJAJ,AR4S UG | 2009 |
| NW YW-5XXX | BAJAJ,RE 205 | 2011 |
| CP QC-2XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| CP YG-3XXX | BAJAJ,RE 205 | 2010 |
| SG QZ-7XXX | BAJAJ,AR4S UG | 2010 |

**விற்பனை நிபந்தனைகள்:**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 1,500 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 வீதம் மீளளிக்கப்படாத வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைமனு பெறுமதியில் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் என்பதோடு, எஞ்சிய 75% தொகையை 2023 அக்டோபர் 18 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00க்கு முன்னர் சியபத்த பினான்ஸ் பீஎல்சி, சியபத்த கோபுரம், 111, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு கிளைக்கும் பணமாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER Black Tie Service with True Aloha!
ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
**A N ALGEWATHTHA AUCTIONEER**
No.333, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com
**www.lankaauction.lk**

## அனைவரும் இலங்கையர் என்ற வகையில்...

# இன, மத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அர்ப்பணிக்க வேண்டும்

### மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரி ஆண்டு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு





இன, மத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளைக் காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வேறுபாடுகளை முன்நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவைச் சந்திக்க நேரிட்டதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதென சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவில் சனிக்கிழமை (07) கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரச்சினைகள் இல்லை எனவும், அனைவரும் ஒன்றுபட்டு ஒரே தேசமாக முன்னோக்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வேறுபாடுகளை முன்நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவைச் சந்திக்க நேரிட்டதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதென சுட்டிக்காட்டினார். 1960களில் நாங்கள் பாடசாலையில் படிக்கும் போது ஒரு பழமொழி சொல்வார்கள். கடவுளுக்கு மகிமை, புனித மைக்கலுக்கு அதிசயம், ஏனென்றால் அன்று உங்கள் பாடசாலை தொடர்ந்து கூடைப்பந்து போட்டிகளில் வென்றது. புனித மைக்கல் அணிக்கு எதிரான கூடைப்பந்து ஆட்டத்தில் வெற்றி பெறுவது கடினமாக இருந்தது. இருந்தும் நாங்கள் அன்று கூடைப்பந்து விளையாட மட்டக்களப்புக்கு வந்தோம். வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கம் இருக்கவில்லை. போட்டி முடிந்ததும் எலரசிங்கத்தின் தென்னந்தோப்புக்கு சென்று குளிப்பதே எமது நோக்கம். இன்று அந்த இடத்தில் பாசிக்குடா சுற்றுலாத் தலமும் அமைந்துள்ளது. அதனால் புனித மைக்கல் கல்லூரி அன்று அவ்வாறு தான் அழைக்கப்பட்டது.

முதலில் இந்த புனித மைக்கல் கல்லூரி இன்று ஒரு தேசிய பாடசாலை. இங்குள்ள கேட்போர் கூடத்தை பழுதுபார்ப்பதற்கு ஆகும் செலவை தெரிவிக்குமாறு அதிபரிடம் கேட்டேன். அதற்கான ஒதுக்கீடுகளை வழங்க நான் தயாராக இருக்கிறேன். பாடசாலையை விஸ்தரிப்பதற்கு காணி அவசியம் என என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. புனித மைக்கல் கல்லூரிக்கு மட்டுமன்றி ஏனைய பாடசாலைகளுக்கும் எதிர்காலத்தில் தேவையான காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக ஆளுநரும், இராஜாங்க அமைச்சர்களும் இணைந்து ஆராய்ந்த பின்னர் எனக்கு முன்மொழிவொன்றை வழங்குமாறு கோரியுள்ளேன். இது இயேசு சபையினால் நிறுவப்பட்ட பாடசாலை. உங்களின் மிகப் பிரபலமான முன்னாள் மாணவர் சுவாமி விபுலானந்தன்.

திருகோணமலை கிழக்கு மாகாணத்தின் தலைநகராக இருக்கிறது. ஆனால் கிழக்கு மாகாணத்தின் கல்வி மையம், மட்டக்களப்பு ஆகும். அதன்படி, அறிவுசார் மூலதனம் இங்குதான் உள்ளது. எனவே நீங்கள் அனைவரும் அதன் ஊடாக நாட்டுக்கு சேவை செய்திருக்கிறீர்கள். எனது பாடசாலைப் பருவத்திற்குப் பிறகு, இந்தப் பகுதிக்கு நான் கல்வி அமைச்சராகத் தான் வருகை தந்தேன். மற்றும் புனித மைக்கல் கல்லூரி தொடர்பில் நிறைய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இப்பாடசாலையை மேம்படுத்த சில நடவடிக்கைகளை எடுக்க எம்மால் முடிந்தது. யுத்தம் காரணமாக உங்களுக்கு விரும்பத்தகாத அனுபவங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு இதேபோன்ற ஒரு கடினமான சூழ்நிலையை நாங்கள் எதிர்கொண்டோம்.

எவ்வாறாயினும், இப்போது ஒரு நாடாக நாம் எதிர்காலத்தைப் பார்க்க வேண்டும். அங்கு, இந்த புனித மைக்கல் கல்லூரிக்கு வழிகாட்டு தலை வழங்க முடியும். அபிவிருத்திக்கு முன் இப்பிரதேச மக்களிடையே ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும். இந்தப் பாடசாலை இயேசு சபை துறவிகளினால் தொடங்கப்பட்ட போதும் இங்கு படித்தவர்களில் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களும் உள்ளனர். உதாரணமாக, எனக்கு நன்றாகத் தெரிந்த பிரிகேடியர் பல்தாசர் இந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர். அவர் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்ற அதிகாரி. மேலும், புலிகள் இயக்க செயற்பாடுகளில் கலந்து கொண்ட மாணவர்களும் இருந்தனர். எனவே இப்பாடசாலை சமூகத்தில் அனைத்து தரப்பு மக்களும் இருந்தனர்.

இப்போது நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து முன்னேற வேண்டும். இங்கு அனைத்து விதமான இசை பாணியையும் இங்கு கேட்டேன். கடவுளுக்கான பிரார்த்தனைக் குரல்கள், இந்து வாழ்த்துச் செய்திகள், சிங்கள ஜெயமங்கல பாடல்கள் அனைத்தும் இங்கு கேட்டன. மேலும் இங்கு கண்டுகளித்த பரத நாட்டியமானது சில மகளிர் பாடசாலைகளில் பார்ப்பதை விட சிறப்பாக இருந்தது .

வரலாற்றில் சில இடைவெளிகள் இருந்தன. நாங்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டோம். அது இந்த நாட்டை படுகுழியில் தள்ளவே காரணமாக அமைந்தது. அரசியல் ரீதியாகவும் போராடினோம். அதிலிருந்து மேலும் கீழே விழுந்தோம். நாட்டின் மிக மோசமான வீழ்ச்சியை நாம் அனுபவித்துள்ளோம். யுத்த காலத்தில் கூட இவ்வாறு நடக்கவில்லை. நான் இந்த நாட்டைக் பொறுப்பேற்ற போது நாட்டில் எரிவாயு இல்லை. பெற்றோல் இல்லை, எங்களுக்கு உணவு இல்லை.

அத்தோடு கொவிட் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவது எவ்வளவு கடினமாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இன, மத வேறுபாடின்றி நாம் அனைவருக்கும் இதனை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நாங்கள் அனைவரும் பாதிக்கப்பட்டோம். இப்போது அதிலிருந்து விடுபட வேண்டும். அரசாங்கம் திட்டங்களை வகுக்கலாம். எமது கடனை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி வருகின்றோம். ஒரு நாடு என்ற வகையில் நாம் ஒன்றிணைந்து முன்னேற வேண்டும்.

பொருளாதாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். அதற்கேற்ப பொருளாதார ரீதியாக நாட்டை பலப்படுத்த முடியும். இனப்பிரச்சினைக்காகவும் மதப்பிரச்சினைகளுக்காகவும் சண்டையிட்டு நாட்டை அதள பாதாளத்தில் தள்ளிய காலம் நினைவிருக்கலாம். அப்படிப்பட்ட காலத்திற்கு நாம் திரும்பிச் செல்லக்கூடாது என்றார்.







கல்லூரிக்கு வருகை தந்த ஜனாதிபதி மாணவர்களுடன் சுமுகமாக கலந்துரையாடினார். அதனையடுத்து பாடசாலை மாணவர்களால் தேசிய கீதம் தமிழ், சிங்கள மொழிகளில் இசைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி, தேசிய கீதத்தில் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று கூறப்படுவதால் அதனை சிங்களத்தில் இசைத்தாலும் தமிழில் இசைத்தாலும்

## கிழக்கு பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழா









**(ஏறாவூர் நிருபர் )**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா வந்தாறுமூலை வளாகத்திலுள்ள நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்றது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் சுமார் 1760 பேர் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

## நபி (ஸல்) அவர்களுடைய பெருமையை உலகம் இறுதிவரை பேசிக்கொண்டேயிருக்கும்

### பொத்துவில் மீலாத் விழாவில் முஷாரப் எம்.பி

**(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)**

நபி (ஸல்) அவர்களுடைய பெருமையை உலகம் பேசிக் கொண்டே இருக்கின்ற இக்கால கட்டத்தில், மீலாத் விழாக்கள் நடந்தாலும், நடக்காவிட்டாலும் அவரது பெருமையை முழு உலகும் இறுதி நாள் வரை பேசிக்கொண்டே இருக்குமென்பதில் சந்தேகமில்லையென பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதான வீதியில் இடம்பெற்ற மீலாத் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், உலகில் அதிகமானோர் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டதற்கு முதன்மையான காரணம் நபி (ஸல்) அவர்களின் நன்னடத்தையும், சிறப்பான நற்குணமும்தான். அதற்குப் பின்னர்தான் பல காரணங்களைச் சொல்ல முடியும்.



எனவே, உலகம் முழுவதும் மாற்று மதங்கள் சார்ந்தவர்கள் பலரும் இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்பட்டதற்கு முதன்மை காரணம் நபியவர்களின் நற்குண இயல்புகள்.

நபிகளாரை பற்றி மாவீரன் நெப்போலியன் சொல்கின்றபோது, திருக்குர்ஆனுக்கும், தூதர் நபி (ஸல்) அவர்களுக்கும் என் விசுவாசத்தை வழங்குகின்றேன். அல்குர்ஆனின் கொள்கைக்கிணங்க ஒரே விதமான ஆட்சியை உலகம் எங்கும் நிறுவக்கூடிய காலம் வெகு தூரத்தில் இல்லை என்று அவர் தெரிவித்தார். அதேபோல், அறிஞர் பேர்னாட்சா தெரிவிக்கையில், முஹம்மது நபியின் நற்பண்புகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றி அவரது கொள்கைகளை நான் ஆதரிக்கின்றேன். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பிரிட்டன் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டுவிடும் என்று பேர்னாட்சா சொன்னார்.

எமது அயல் நாடான இந்திய தேசத்தின் ஜவஹர்லால் நேரு ஒரு முறை கூறுகின்றபோது, முஹம்மது நபியின் வெற்றிக்கு முதல் காரணம் அவர்கள் கொண்டிருந்த உறுதியும், ஊக்கமும்தான். இத்தகைய உறுதி அத்தகைய சூழலில் ஏற்படுவது எழிதன்று. இரண்டாவது காரணம் இஸ்லாம் போதிக்கும் சமத்துவமும், சகோதரத்துவமும் என்றார்.

இந்திய தேசத்திலிருந்து சமத்துவம், சகோதரத்துவத்தையும் போதித்தமைக்காக நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அலைஹி வஸல்லாம் அவர்களை உயர்வாகப் பார்க்கின்றேன் என்றார்.

ஒரு சீப்பின் பல்வரிசை போல மனிதர்கள் அனைவரும் சமத்துவமானவர்கள் என்று நபி அவர்கள் சொன்னார்கள். இந்த மார்க்கத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அலைஹி வஸல்லாம் அவர்கள் போதித்த சமத்துவம்,சகோதரத்துவம் தவிர வேறு எதையும் சொல்ல முடியாது என்றார்.

## ஆரையம்பதியில் கிறிஸ்தவ தேவாலயம் உடைப்பு; இரு குத்துவிளக்குகளும் திருட்டு

### பொலிஸாரினால் விளக்குகள் கண்டுபிடிப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மண்டபத்தை உடைத்து அங்கிருந்த இரண்டு பெறுமதியான உலோக குத்துவிளக்குகள் திருடப்பட்டுள்ளன.



குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட திருடன் தப்பிச் சென்றுள்ள போதிலும் குத்து விளக்குகளை காத்தான்குடி பொலிசார் நேற்று காலை (8) மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ.ரஹீம் தெரிவித்தார். ஆரையம்பதி பிரதான வீதியில் உள்ள தூய குழந்தை திரேசா ஆலயத்தின் மண்டபத்தை கடந்த 3ம் திகதி உடைத்து அங்கிருந்த இரண்டு பெறுமதியான குத்து விளக்குகளை திருடி சென்ற நபர் தப்பியோடிள்ள நிலையில் குறித்த குத்துவிளக்குகளை ஆரையம்பதி கர்பலா பிரதேசத்தில் உள்ள பற்றைக் காட்டுக்குள் இருந்து பொலிஸார் மீட்டெடுத்துள்ளதோடு அவரை தேடியும் வருகின்றனர். மண்டபத்தின் முன் கதவை உடைத்தே திருடன் குறித்த குத்து விளக்குகளை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

### மூன்று பேர் ஆபத்தான நிலையில்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

ஒலுவில் வெளிச்ச வீட்டு பிரதேசத்தில் சனிக்கிழமை (07) மாலை மின்னல் தாக்கி ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளதோடு, மூன்று பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒலுவில் வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் வீச்சு வலை மூலம் மீன்பிடித்துக் கொண்டிருந்த 4 பேர் மின்னல் தாக்கத்துக்குள்ளாகினர். மின்னல் தாக்கத்தில் ஒலுவில் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த 04 பிள்ளைகளின் தந்தையான சுபைதீன் நிஜாமுதீன் (34) ஸ்தலத்திலேயே மரணம் அடைந்துள்ளார். மின்னல் தாக்கத்துக்குள்ளான ஏனைய மூவரும் ஒலுவில் பிரதேச வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## மூதூர் பிரதேசத்திற்கு மரண விசாரணை அதிகாரி நியமனம்

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பிரதேச செயலக பிரிவில் நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரியாக நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கிஷாந்தி மீகஹ பொலவினால் மூதூர் மத்திய வீதியைச் சேர்ந்த முகம்மது யூசுப் லாபீர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் ஐந்து வருட காலப்பகுதி வரை செல்லுபடியாகும் வரை நியமிக்கப்பட்டுள்ளதுடன் மூதூர் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து தமது கடமையை அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்

# வெள்ளத்தினால் பாதிப்படைந்த வயல்களுக்கு விரைவில் நஷ்டஈடு

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவற்றினால் பாதிப்படைந்த வயல்களுக்கு நட்டஈட்டினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல: KSWD&EIP/ACQ/KL/DWC/07**
**காணி அமைச்சின் இல : 4-3/4/2020/LRB/180**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக் காணித் துண்டுகள் தொடர்பாக, காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள், 2023 ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023/09/21 ஆம் திகதிய 2350/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | மாகாணம் | : மேல் மாகாணம் |
| 2. | மாவட்டம் | : கொழும்பு |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | : கொலொன்னாவை |
| 4. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல. 506C - மகபுத்கமுவ B |
| 5. | கிராமம் | : மகபுத்கமுவ B |
| 6. | வரைபட இல | : கடத்திரல் வரைபட இல. 521822 (தாகுதி இல. 04 தாள் இல/ 1) |
| 7. | காணியின் பெயர் | : துப்பஹிவெல கும்புர மற்றும் மகபுத்கமுவ வரி மதிப்பீட்டு இல. 080/006 எனும் காணி |
| 8. | துண்டு இல. | : துண்டு இல, 1,2,3,4 (04 காணித் துண்டுகள்) |
| 9. | முழு விஸ்தீரணம் | : 3.1414 ஹெக்டயார் |

**எச். திலக்கவர்தன.**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்**
**கொலொன்னாவை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவு**

**கொலொன்னாவை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,**
**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்.**
**இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை,**
**இராஜகிரிய**
**2023.10.02**




Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
## கேள்வி அழைப்பு (IFB)

| உருப்படி இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | தெற்கு அதிவேக வீதி நீடிப்பில் அபரெக்க செயற்றிட்ட அலுவலகம்/ இதற்கான இயந்திரப் பிரிவில் அலுவலக விடயங்கள் சார்பாக தகைமையுள்ள தொழிலாளர்களை வழங்குதல் **RDA/EOM&M/SP/ESE/MECH-LAB/2023/30** |

மேற்படி செயற்றிட்டத்திற்காக தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023 ஒக்டோபர் 09 முதல் 2023 ஒக்டோபர் 30 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் நெஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின்
பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## கேள்விமனுக் கோரல்

### உடதும்பர பிரதேச சபை

பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள உடதும்பர பிரதேச சபையின் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வர்த்தக நிலையம் | கடை அறை இலக்கம் | அதி குறைந்த மாதாந்த கேள்வித் தொகை (ரூ) | விலைமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ) | குத்தகைக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | உடதும்பர பொதுச் சந்தை | 13 | 16,000.00 | 2,000.00 | 10,000.00 | 2023.11.01 முதல் 2026.12.31 வரை (03 வருடங்கள்) |
| 02 | உண்ணஸ்கிரிய பல்கருமக் கட்டடம் | 02 | 17,500.00 | 2,000.00 | 10,000.00 | 2023.11.01 முதல் 2026.12.31 வரை (02 வருடங்கள்) |
| 03 | -மேலது- | 03 | 13,500.00 | 2,000.00 | 10,000.00 | -மேலது- |
| 04 | -மேலது- | 05 | 12,000.00 | 2,000.00 | 10,000.00 | -மேலது- |

1. விலைமனுவுக்கான படிவங்களை 2023.10.09 முதல் 2023.10.25 திகதி பி.ப 2.30 மணி வரை உடதும்பர பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைமனுக்களை முதற்பிரதி, இணைப்பிரதி என வேறாக்கி பின்னர் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "உடதும்பர பிரதேச சபையின் ஆதனங்களைக் குத்தகைக்கு விடும் விலைமனு" எனக் குறிப்பிட்டு 2023.10.26 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் "விலைமனுக் குழுத் தலைவர், உடதும்பர பிரதேச சபை, உடதும்பர" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது அவற்றை உடதும்பர பிரதேச சபையின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும்.
3. 2023.10.26 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்குப் பிரதேச சபையின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும், அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள முடியும்.
4. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தீர்மான அதிகாரம் டென்டர் சபைக்கு உரியது.

**டி.எம்.ஆர்.என். திசாநாயக்க**
**செயலாளர்**
**உடதும்பர பிரதேச சபை**

**உடதும்பர பிரதேச சபை**
**2023 ஒக்டோபர் 04 ஆம் திகதி**
**தொலைபேசி : 081-2402413**

## பெறுகை அறிவித்தல்

### வெகுசன ஊடக அமைச்சு
### இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் – 2024/2025

2024-02-01ஆம் திகதி முதல் 2025-01-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 303, 224ஆம் இலக்க அலுவலக வளவுகள், கூட்டுத்தாபன திரையரங்குகள் மற்றும் தலுகம சரசவி கலையகத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கு தகைமை வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியான விலைக்கோரலின் (NCB) கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | விபரங்கள் | விலைமனுப் பிணை முறி | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| NFC/BID/S/2023-2 | இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 303, 224ஆம் இலக்க அலுவலக வளவுகள், கூட்டுத்தாபன திரையரங்குகள் மற்றும் தலுகம சரசவி கலையகத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் | ரூபா 90,000.00 | 2023.11.01ஆம் திகதி முதல் 90 நாட்கள் வரை |

அரச / அரை அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்கும், வியாபாரப் பதிவு நாள் முதல் 03 வருடத்திற்கும் குறையாத காலம் சேவை அனுபவம் கொண்ட, பாதுகாப்பு அமைச்சின் பதிவுச் சான்றிதழுடன் கூடிய மற்றும் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதியைக் கொண்ட செல்லுபடிக் காலம் சகிதம் மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியொன்றை இலங்கையில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றில் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் பெற்று அதன் மூலப் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வழங்கல் மற்றும் வியாபார உதவிப் பொது முகாமையாளர் (0112 584295) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்களை தேசிய திரைப்படக் கூட்டுத்தானபத்தின் வழங்கல் மற்றும் வியாபாரப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். 2023-10-09ஆம் திகதி முதல் 2023-11-01ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரையான காலத்தினுள் மேற்படி சேவைகள் வழங்க வேண்டிய இடங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சகல விலைமனுக்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2023-10-09ஆம் திகதி முதல் 2023-11-01ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரையான கடமை நாட்களில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு தமது நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் காசாளருக்கு மீளளிக்கப்படாத 2000.00 ரூபா (இரண்டாயிரம் ரூபா மட்டும்) தொகையைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் மற்றும் வியாபாரப் பிரிவில் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாகக் குறிப்பிட்டு கடித உறைக்கு முத்திரைக் குறி பொறித்து, மீண்டும் அவ்விரு கடித உறைகளையும் வேறொரு கடித உறையிலிட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான விலைமனு - 2024/2025'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023-11-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு பணிப்பாளர் சபை கூட்ட அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இதற்கு இயைபான மேலதிக தகவல்கள் விலைமனுப் படிவத்தில் தரப்பட்டுள்ளன.

**தலைவர், திரைப்படக் கூட்டுத்தாபன பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,**
**இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**
**(தொலைபேசி / தொலைநகல்: 011-2584295)**

## பெறுகை அறிவித்தல்

### வெகுசன ஊடக அமைச்சு
### இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் – 2023/2024

2023-12-10ஆம் திகதி முதல் 2024-12-09ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 303, 224ஆம் இலக்க அலுவலக வளவுகள், கூட்டுத்தாபன திரையரங்குகள் மற்றும் தலுகம சரசவி கலையகத்திற்கான துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கு தகைமை வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியான விலைக்கோரலின் (NCB) கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | விபரங்கள் | விலைமனுப் பிணை முறி | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| NFC/BID/S/2023-1 | இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 303, 224ஆம் இலக்க அலுவலக வளவுகள், கூட்டுத்தாபன திரையரங்குகள் மற்றும் தலுகம சரசவி கலையகத்திற்கான துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் | ரூபா 80,000.00 | 2023.10.31ஆம் திகதி முதல் 90 நாட்கள் வரை |

அரச / அரை அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்கும், வியாபாரப் பதிவு நாள் முதல் 05 வருடத்திற்கும் குறையாத காலம் சேவை அனுபவம் கொண்ட, பதிவுச் சான்றிதழுடன் கூடிய மற்றும் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதியைக் கொண்ட செல்லுபடிக் காலம் சகிதம் மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியொன்றை இலங்கையில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றில் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயரில் பெற்று அதன் மூலப் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வழங்கல் மற்றும் வியபார உதவிப் பொது முகாமையாளர் (0112 584295) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்களை தேசிய திரைப்படக் கூட்டுத்தானபத்தின் வழங்கல் மற்றும் வியாபாரப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். 2023-10-09ஆம் திகதி முதல் 2023-10-31ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரையான காலத்தினுள் மேற்படி சேவைகள் வழங்க வேண்டிய இடங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சகல விலைமனுக்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2023-10-09ஆம் திகதி முதல் 2023-10-31ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரையான கடமை நாட்களில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு தமது நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் காசாளருக்கு மீளளிக்கப்படாத 2000.00 ரூபா (இரண்டாயிரம் ரூபா மட்டும்) தொகையைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் மற்றும் வியாபாரப் பிரிவில் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாகக் குறிப்பிட்டு கடித உறைக்கு முத்திரைக் குறி பொறித்து, மீண்டும் அவ்விரு கடித உறைகளையும் வேறொரு கடித உறையிலிட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் "துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கான விலைமனு - 2023/2024" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023-10-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு பணிப்பாளர் சபை கூட்ட அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இதற்கு இயைபான மேலதிக தகவல்கள் விலைமனுப் படிவத்தில் தரப்பட்டுள்ளன.

**தலைவர், திரைப்படக் கூட்டுத்தாபன பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,**
**இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**
**(தொலைபேசி/தொலைநகல்: 011-2584295)**

## இலங்கை துறைமுக அதிகார சபை

### 2024ஆம் வருடத்தின் பொருட்டு உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கைத் துறைமுக அதிகார சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01 | பெட்டறி, ஈயம், அமிலம் மற்றும் அவ்வாறான பொருட்கள் |
| 02. | இயந்திராதிகளுக்குத் தேவையான சகல பெயாரிங் வகைகள் |
| 03. | கட்டிடப் பொருட்கள் (செங்கல், கல், மணல், இரும்பு, PVC குழாய்கள் மற்றும் உருப்படிகள், கூரைத்தகடுகள் மற்றும் சீலிங் சீட்டுகள்) |
| 04. | இரசாயனப் பொருட்கள், கைத்தொழில், விவசாய இரசாயனங்கள், களைக் கொல்லிகள், அனைத்து வகையான சவர்க்காரங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமிநாசினி வகைகள் |
| 05 | சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| 06 | கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி அச்சுப் பொறிகள், மென்பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், டோனர் வகைகள் |
| 07 | வீட்டு மின் உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள், VHF மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரண உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள், கட்புல செவிப்புல உபகரணங்கள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், உறைநிலை குளிர்சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 08 | மின்சார கேபள்கள் மற்றும் தொலைத்தொடர்பு கேபள்கள் |
| 09 | மின்சார கட்டுப்பாட்டு முறைமை மற்றும் துணைப்பொருட்கள் மற்றும் மின்சார பொருத்தும் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 10 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 11 | பொறியியலாளர் கருவிகள் மற்றும் உபகரணங்கள், நீர்க்குழாய் திருகு மூடிகள், பம்பிகள், எரிவாயு மற்றும் சமையலறை உபகரணங்கள், உருக்கியொட்டும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 12 | காலணிகள் - கன்வஸ் மற்றும் தோற் சப்பாத்துகள், பூட்ஸ், பாதுகாப்பு காலணிகள் போன்றன |
| 13 | உலோகப் பொருட்கள் ஆணிகள் மற்றும் சுரைகள், பித்தளை உபகரணங்கள், உலோகக் குழாய்கள் மற்றும் குழாய் பொருத்தும் பகுதிகள், உலோகத் தகடு, உலோக பொதுவான பல்வேறு வடிவங்கள் மற்றும் கவசப் பொருட்கள், வலை வகைகள், தும்புத்தடி, ஈர்க்கிள், தும்புக் கயிறு மற்றும் ஏனைய தும்பு உற்பத்திகள், கம்பித் தூரிகை மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள் பூசும் தூரிகை வகைகள், கண்ணாடி, மெல்லிய பலகைகள் MDF மற்றும் போர்மிகா வகைகள் |
| 14 | தகரங்களைச் சுத்தம் செய்யும் கிறிட் பிளாஸ்டிங் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வார்ப்பு மண் |
| 15 | ஹோஸ் குழாய்கள் (ஹைட்ரோலிக், அதியமுத்த வாயு, தீயணைப்பு போன்றவைகளுக்கானது) |
| 16 | உராய்வுநீக்கி எண்ணெய்கள் |
| 17 | மெனிலா, புரோலிபொப்லின் மற்றும் நைலோன் கயிறுகள் |
| 18 | கையடக்கத் தொலைபேசிகள் |
| 19 | அலுவலக காகிதாதிகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள் |
| 20 | நிறப்பூச்சுகள் (இனாமல் மற்றும் இமல்ஷன்) பொலிஷ் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள், விசிறியடிக்கும் நிறப்பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறப்பூச்சு வகைகள் (உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் மட்டும்) |
| 21 | போர்சலின் பொருட்கள், துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் |
| 22 | வீதிகளுக்கான தார் வகைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட தார் கலவை, சீமெந்து மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள் |
| 23 | இறப்பர் மற்றும் வேல்கனைசிங் உற்பத்திகள் |
| 24 | பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள், சுழியோடும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 25 | வாகன உதிரிப்பாகங்கள், ரேடியேட்டர் மற்றும் ரேடியேட்டர் கோர்கள் |
| 26 | கிரேன், போக் லிப்ட், டொப் லிப்ட் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்கள், கடல்சார் சாதனங்களுக்கான உதிரிப்பாகங்கள், பிரைம் மூவர்கள் மற்றும் யாட் டிராக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 27 | உருக்குத் தளபாடங்கள், மரத்தளபாடங்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள் |
| 28 | அரியப்பட்ட பலகைகள் |
| 29 | டயர்கள் மற்றும் டியூப்கள் |
| 30 | வயர் ரோப் வகைகள் |
| 31 | மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவ உபகரணங்கள் |
| 32 | புகைப்படங்கள் தயாரித்தல், அச்சிடல் மற்றும் அது சார்ந்த சகல சேவைகளும் உள்ளடங்கலாக |
| 33 | நாய் உணவு |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநராக பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 01 தொடக்கம் 33 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.30 மணி வரை 2023-11-30ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை 1000.00 ரூபா மற்றும் வெட் வரியைச் செலுத்தியதன் பின் இல. 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு-01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் பிரதான வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. வழங்கலின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடம் இருந்து விலைகளைக் கோரவும் கொள்வனவு செய்வதற்கான உரிமையை துறைமுக அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
04. முறையாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள், துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு ஒவ்வாத தன்மையிலுள்ள பொருட்கள் மற்றும சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.
05. அனைத்து விண்ணப்பங்களும் "2024ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு 2023-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பிரதான வழங்கல் முகாமையாளர் அலுவலகத்தில் இந்த விண்ணப்பங்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

06 மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2482499, 2320250, 2482761 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01**

# சீனாவின் ஆதிக்கத்துடன் ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவு




சீனா 201 சாதனை தங்கப்பதங்களை வென்ற நிலையில் ஆசிய விளையாட்டுப் போட்டி கோலாகலமாக நேற்று (08) நிறைவுக்கு வந்தது.

சீனாவின் ஹான்சோ நகரில் இரண்டு வாரங்களாக இடம்பெற்று வந்த ஆசிய விளையாட்டுப் போட்டியின் நிறைவு நிகழ்வு 80,000 பேர் அமரக்கூடிய ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெற்றதோடு அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டியை 2026 ஆம் ஆண்டில் நடத்த ஜப்பானுக்கு கையளிக்கப்பட்டது.

ஆசிய விளையாட்டுப் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றபோதும் கொரோனா தொற்று காரணமாக இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டி இரண்டு ஆண்டுகள் தாமதித்து நடைபெற்றதால் குறுகிய காலத்தில் நகோயாவில் அடுத்து ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

இம்முறை போட்டியின் கடைசி தங்கப்பதக்கத்தை 50 கிலோகிராம் குமிடே கராட்டே போட்டியில் தாய்வானின் கு ஷியோ சுவாங் வெற்றி பெற்றார். எனினும் முழு ஆதிக்கம் செலுத்திய போட்டியை நடத்தும் சீனா 201 தங்கப்பதக்கங்களை வென்று ஆசிய விளையாட்டுப் போட்டி ஒன்றில் அதிக தங்கப் பதக்கங்களை வெற்ற சொந்த சாதனையை முறியடித்தது. 2010 குவான்சே போட்டியில் 199 தங்கங்களை வென்ற சாதனையே முறியடிக்கப்பட்டது.

எனினும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சீனா 1982 தொடக்கம் பதக்கப் பட்டியில் முதலித்தை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதிக இடைவெளியுடன் ஜப்பான் 52 தங்கங்களை வென்று இரண்டாவது இடத்தையும் தென் கொரியா 42 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

இதில் 28 தங்கங்களுடன் நான்காவது இடத்தை பிடித்த இந்தியா மொத்தமா 107 பதக்கங்களை வென்று முதல் முறை 100 பதக்கங்களை தாண்டியது. இலங்கை ஒரு தங்கம் 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 28 ஆவது இடத்தை பிடித்தது.

# ஹமாஸின் தாக்குதலை அடுத்து காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து சரமாரி வான் தாக்குதல்

ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலிய நகரங்களுக்கு ஊடுருவி நூற்றுக்கணக்கானோரை கொன்று மேலும் பலரை கடத்திச் சென்று கடந்த பல தசாப்தங்களில் இல்லாத பாரிய தாக்குதலை நடத்திய நிலையில் இஸ்ரேலிய படையினர் காசா பகுதி மீது சரமாரி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இது மத்திய கிழக்கில் பெரும் போர் ஒன்றுக்கு வழிவகுத்துள்ளது. இந்த மோதல் காசாவை தாண்டி விரிவடையும் சமிக்ஞையாக லெபனானின் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் இஸ்ரேலுக்கு இடையே பரஸ்பரம் பீரங்கி மற்றும் ரொக்கெட் குண்டு தாக்குதல் இடம்பெற்றிருக்கும் அதே நேரம் எகிப்தின் அலெக்சாண்ட்ரியாவில் இஸ்ரேலிய



## இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் பலி: போர் வெடிக்கும் அச்சுறுத்தல்

சுற்றுலா பயணிகள் இருவருடன் அவர்களின் எகிப்தைச் சேர்ந்த பாதுகாவலர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை (07) இரவில் காசாவில் உள்ள வீட்டுத் தொகுதிகள், சுரங்கப்பாதைகள், பள்ளிவாசல் ஒன்று மற்றும் ஹமாஸ் அதிகாரிகளின் வீடுகள் மீது இஸ்ரேல் சரமாரி வான் தாக்குதல்களை நடத்தியது. இதனால் 20 சிறுவர்கள் உட்பட 300க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். 'இந்த பயங்கர தினத்திற்காக தீவிரமாக பழிவாங்கப்படும்' என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார். மறுபுறம் இந்த எதிர்பாராத தாக்குதலுக்கு பின்தெற்கு இஸ்ரேலில் கடந்த 24 மணி நேரமாக இஸ்ரேலிய படையினர் மற்றும் ஹமாஸ் போராளிகள் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றனர். சரமாரி ரொக்கெட் தாக்குதல் ஒன்றை அடுத்தே சனிக்கிழமை காசா எல்லையை ஒட்டிய இஸ்ரேலிய நகரங்களுக்குள் ஹமாஸ் போராளிகள் எல்லை வேலிகளை உடைத்து ஊடுரவி உள்ளனர்.

இந்தத் தாக்குதலை தடுக்கத் தவறியது தொடர்பில் பெரும் கேள்விகளுக்கு உள்ளாகி இருக்கும் இஸ்ரேலிய படையினர் தமது நிலப்பகுதியின் பல பகுதிகளையும் மீட்டதாகவும் நூற்றுக்கணக்கான தாக்குதல்தாரிகளை கொன்று மேலும் பல டஜன் பேரை சிறைப்பிடித்ததாகவும் தெரிவித்துள்ளனர். எனினும் சில இடங்களில் நேற்று மாலை வரை மோதல் நீடித்து வந்தது.

காசாவை சூழவுள்ள பகுதியில் ஆயிரக்கணக்கான படையினரை குவித்திருப்பதாக குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேல், 2.3 மில்லியன் பலஸ்தீனர்கள் வாழும் அந்த குறுகிய நிலப்பகுதிக்கு அருகில் வசிக்கும் இஸ்ரேலியர்களை அப்புறப்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. இது காசா மீது தரைவழி தாக்குதல் ஒன்றுக்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 'நாம் தீவிரமாக ஹமாஸை தாக்கப்போகிறோம். அது நீண்டதாக இருக்கும்' என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் தமது மக்களின் பாதுகாப்புக்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹமாஸ் பேச்சாளர் அப்தல் லதிப் கனுவா தெரிவித்துள்ளார். தமது அமைப்பு தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் எல்லை கடந்து தொடந்து தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

50 ஆண்டுகளுக்கு முன் தாம் இழந்த நிலத்தை மீட்பதற்காக எகிப்து மற்றும் சிரியா யோம் கிப்புர் போரை இஸ்ரேல் மீது தொடுத்ததன் பின்னர் இஸ்ரேல் மீதான மிகப்பெரிய ஊடுருவலாக இது பதிவாகியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையில் இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் அமெரிக்க ஆதரவு முயற்சி வெற்றி அளித்து வரும் சூழலிலேயே அதனை பதிப்பிழக்கச் செய்யும் வகையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த இராஜதந்திர முயற்சி ஹமாஸின் பிரதான ஆதரவாளர்களின் ஒன்றான ஈரானுக்கு மற்றும் பலஸ்தீன சுயநிர்ணய உரிமைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இருந்தது. மற்றொரு பிராந்திய சக்தியான ஈரானின் ஆதரவு பெற்ற லெபனானின் ஹிஸ்புல்லா பதற்றத்தை மேலும் அதிகரிக்கக் கூடும் என்ற நிலையில், இதற்குள் ஹிஸ்புல்லா வரக் கூடாது என்றும் அவர்கள் அதனைச் செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை என்றும் இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

**அதிகாலை தாக்குதல்**

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல்களின் சேதங்களை இஸ்ரேலிய தெற்கு நகரங்கள் மற்றும் எல்லை பகுதிகளில் நேற்று காலையில் காண முடிவதாக இருந்தது. புறநகர் பகுதி வீதிகள், கார்கள் மற்றும் வீடுகளில் சிதறிக் கிடந்த சடலங்களை பார்க்க முடிவதாக இருந்தது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் 400க்கும் அதிகமான இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. இதில் மூத்த இராணுவ அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர். இதனால் அச்சமடைந்த இஸ்ரேலியர்கள் பாதுகாப்பு அறைகளுக்குள் அடைக்கலம் பெற்றிருப்பதோடு தமது அவலநிலை பற்றி தொலைபேசி மற்றும் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பில் விபரித்துள்ளனர். தாக்குதல் நடத்திய போராளிகள் பலரையும் பணயக் கைதிகளாக பிடித்துக் கொண்டு காசாவுக்கு திரும்பியுள்ளனர். இதில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் அடங்குகின்றனர். பிடித்து வந்தோரின் எண்ணிக்கை பற்றி பின்னர் அறிவிப்பதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது. தாக்குதலின்போது இலக்கு வைக்கப்பட்ட நடன விழாவில் பங்கேற்ற சுமார் 30 பேர் காணாமல்போன நிலையில் மறைந்திருந்த அவர்கள் நேற்று வெளியே வந்திருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிடிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான இஸ்ரேலியர்கள் இரத்தம் சிந்தும் நிலையில் பாதுகாப்புச் சோதனைச் சாவடி வழியாக காசாவை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டதோடு மேலும் சிலர் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஹமாஸ் இஸ்ரேல் மீது நேற்று சரமாரியாக ரொக்கெட் குண்டுகளை வீசிய நிலையில் தெற்கு இஸ்ரேலில் சைரன் ஒலி தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வந்தது. எல்லைப் பகுதிகளில் இருந்து மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு தாக்குதல்தாரிகளை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. காசாவில் ஹமாஸ் மற்றும் மற்றொரு போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் இராணுவ மற்றும் அரச திறன்களை அழிப்பதற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு ஒப்புதல் அளித்திருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.காசாவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதோடு எரிபொருள் விநியோகம் மற்றும் காசாவுக்கு பொருட்கள் செல்வதும் நிறுத்தப்பட்டுள்ளது.

**காசாவில் அழிவு**

ஹமாஸின் தாக்குதல் இடம்பெற்ற விரைவிலேயே காசா மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை ஆரம்பித்து தொடர்ந்து நடத்தி வருகிறது. நேற்று ஹமாஸ் அமைப்பின் அலுவலகங்கள், பயிற்சி முகாம்களுடன் வீடுகள் மற்றும் ஏனைய கட்டடங்களும் தாக்கப்பட்டன. சில பகுதிகளில் நீர் விநியோகத்தை இஸ்ரேல் துண்டித்ததாக ஹமாஸ் தெரிவித்தது.

இஸ்ரேலிய பதில் தாக்குதல்களில் காசாவில் இதுவரை 313 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு சுமார் 2000 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கறுப்புப் புகை, செம்மஞ்சள் நெருப்பு காசா வானை சூழ்ந்திருப்பதோடு வானுக்கு மேலால் இஸ்ரேலிய ஆளில்லா விமானங்கள் சுற்றித் திரிவதை காண முடிகிறது. முந்தைய தாக்குதல்களில் இஸ்ரேலிய இராணுவம் காசா குடியிருப்பாளர்களுக்கு வழங்கிய முன்னெச்சரிக்கை இம்முறை தாக்குதல்களில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

தென் காசாவின் கான் யூனிஸ் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்று தாக்கப்பட்ட நிலையில் நேற்று காலை இடுபடிடுகளில் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. 'இரவுத் தொழுகைக்குப் பின் திடீரென்று பள்ளிவாசல் மீது குண்டு வீசப்பட்டது. சிறுவர்கள் மற்றும் முதியவர்கள பயத்தில் உறந்தனர்' என்று அங்குள்ள குடியிருப்பாளர் ஒருவரான ரமிஸ் ஹனிக்டெக் தெரிவித்தார்.

**'நாம் உங்களை எச்சரிக்கிறோம்'**

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு மேற்குக் கரையில் அண்மைக் காலத்தில் வன்முறை அதிகரித்திருந்த சூழலிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பலஸ்தீன அதிகாரசபை மற்றும் ஹமாஸ் அமைப்பு தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலில் ஆட்சிக்கு வந்த தென்யாகுவின் தீவிர வலதுசாரி அரசு பஸ்தீனர்கள் மீது தொடர்ச்சியான சுற்றிவளைப்பு தெடுதல்களை நடத்தி வந்ததோடு இஸ்ரேலிய குடியேற்றவாசிகளின் தாக்குதல்களும் அதிகரித்திருந்தன.

இந்நிலையில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இந்தத் தாக்குதலை கண்டித்திருப்பதோடு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஈரான் மற்றும் ஏனைய நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். 'இஸ்ரேலுக்கு விரோதமான எந்தத் தரப்பும் இந்தத் தாக்குதலை பயன்படுத்திக்கொள்ள இது தருணமல்ல' என்று அவர் குறிப்பிட்டார். மத்திய கிழக்கில் ஹமாஸின் தாக்குதலுக்கு ஆதரவு அளித்து பேரணிகள் இடம்பெற்றதோடு ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாத இந்தத் தாக்குதலை வரவேற்றுள்ளன.

## சர்வதேச செய்திகள்

# களுத்துறை மாவட்ட அகதிய்யா சம்மேளன விழா









களுத்துறை மாவட்ட அகதிய்யா சம்மேளனத்தின் 22ஆவது ஆண்டு விழாவும் மாணவர்களது பரிசளிப்பும் நேற்று முன்தினம் (07) பாணந்துறை, அம்பலாந்துவ இல்மா முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. களுத்துறை மாவட்ட அகதிய்யா சம்மேளனத்தின் தலைவர் எம்.எம்.எம். உவைன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரனி அலி சப்ரி மற்றும் சமய கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மர்ஜான் பளீல், மலேசியா நாட்டின் உயர் ஸ்தானிகர் பதி ஹசாம் அடம் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்: அஷ்ரப் ஏ சமத், பாணந்துறை மத்திய விசேட நிருபர்)

காலி, மாத்தறை மாவட்ட

# பாடசாலைகள் இரு தினங்கள் பூட்டு

## மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ளம்

**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் குறிப்பிட்ட இரு மாவட்டங்களிலுமுள்ள சகல பாடசாலைகளுக்கும் இன்று 9ம் திகதி திங்கட்கிழமையும், நாளை 10ம் திகதி செவ்வாய்க்கிழமையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. மாத்தறை மாவட்டப் பாடசாலைகள் கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளிலும் மூடப்பட்டிருந்தது. தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலி கமகே தலைமையில் தென் மாகாண அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், மற்றும் கல்வி அதிகாரிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாரம் நடைபெறவிருந்த 2ம் தவணைப் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.



தெலிஜ்ஜவில பகுதியில ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் ஒரு வீடு முற்றாக நீரில் மூழ்கியிருப்பதையும் படத்தில் காணலாம்.

# 'வெய்யில் மனிதர்கள்' நூல் வெளியீடு




இலங்கை நெய்னார் காப்பகத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் பன்முக ஆளுமை அஷ்ரப் ஷிஹாப்தீன் மொழிபெயர்த்த 'வெய்யில் மனிதர்கள்' நூல் அறிமுக விழா கொழும்பு தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்றது.

மூத்த எழுத்தாளர் அல் அஸுமத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பத்திரிகையாளரும் தொழிலதிபருமான பஷீர் அலி முதற்பிரதியை பிரதம அதிதி பலஸ்தீன தூதுவராலயத்தின் முதல் செயலாளர் பதில் தூதுவர் ஹிஷாம் அபு தாஹாவிடம் இருந்து பெற்றுக் கொள்வதையும் ஏனைய அதிதிகளையும் படத்தில் காணலாம்.





ஆரியபட்டர் குமர உதயம் அறநெறி பாடசாலையில் நடைபெறும் விநாயகர் சதுர்த்தி நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி பாணு சிவப்பிரகாசம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜீ. விஷ்ணுகாந்தும் கலந்து கொண்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 9ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் – குளியாப்பிட்டிய

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் கீழே குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளை வழங்குவதற்காக இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்துடன் பதிவு செய்வதற்கு விரும்பும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொருட்கள் மற்றும் சேவைகள் 43 வகுதிகளின் கீழ் பதிவு செய்து கொள்ளப்படும்.

ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளுக்கு பதிவுகள் கோரப்படுமாயின் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் பதிவு செய்வதற்காக மீளப்பெறமுடியாத கட்டணமாக 2,000.00 ரூபாவுக்கான வங்கி வரைவொன்றை 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் "இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்" எனும் பெயரில் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். **காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.** எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

விலைக்கோரல்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட கடிதங்களுக்கு பதிலளிக்காத அல்லது 2023ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட விலைக்கோரல் மற்றும் கட்டளைகள் தொடர்பில் செயற்பட்ட விதம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். விலைக் கோரல்களுக்கு பதிலளிக்காத மற்றும் கட்டளைக்கான பொருட்களை வழங்காத வழங்குநர்கள் தொடர்பில் பல்கலைக்கழக பெறுகைக் குழுவினால் வழங்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் பதிவுகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வழமையாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்தே விலைமனுக்கள் கோரப்படும். ஆனால் போட்டி ரீதியிலான விலைமனுக்களை பெறும் நோக்கில் ஏனைய வளங்களிலிருந்து, விலைமனுக்களை கோருவதற்கு அல்லது வழங்குநர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

2024ஆம் வருடத்திற்காக தங்களை பதிவு செய்துள்ள வழங்குநர்கள் ஆகக் குறைந்தது 30 நாட்களுக்கான கடன் வசதிகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.

தங்களை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள் குறித்த விண்ணப்பத்துடன், அவரின் பெ.சே.வ. (VAT) பதிவு சான்றிதழ், தேசிய அடையாள அட்டை/ அட்டைகளின் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும் நிர்மாண ஒப்பந்தங்களுக்காக தங்களை பதிவு செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பங்களுடன் CIDA பதிவுகளின் பிரதி ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களுடன் தேவையற்ற ஆவணங்களை இணைக்க வேண்டாம் என உங்களிடம் தயவுடன் வேண்டுகிறோம்.

மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் வகுதிகள் / உப வகுதிகள் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் தயாரித்துக்கொண்ட விண்ணப்படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து கடித உறையில் இட்டு **''வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பம் - 2024''** எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு **''பிரதி நிதியாளர் / வழங்கல்கள், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், குளியாப்பிட்டிய''** எனும் முகவரிக்கு 2023 ஒக்டோபர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இது தொடர்பிலான ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் இலங்கை வயம்ப பல்கலைக்கழக வழங்கல் பிரிவின் பிரதி நிதியாளரிடமிருந்து 037-2283617 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்,**
**குளியாப்பிட்டிய.**
**2023-10-06.**

பொருட்களின் பெறுகை:

தொகுதி இல: 01
**காகிதாதிகள் மற்றும் அலுவலக பாவனைப் பொருட்கள்**
- 1.1 அச்சடிக்கும் தாள்கள், தட்டச்சு தாள்கள், ரோணியோ தாள்கள், கார்பன் பேப்பர்கள், கடித உறைகள், பைல் கவர்கள், சீ.ஆர். புத்தகங்கள், இன்ங் பேட்கள், குண்டூசிகள், பேப்பர் கிளிப்கள், ஸ்டேப்லர் பின்கள், பேப்பர் வெயிட்கள், பேனாக்கள் (போல் பொயின்ட்) பென்சில்கள், வெண்கட்டிகள், இறப்பர் முத்திரைகள், மெகி போட்கள் மற்றும் மெகி போட் பேனைகள் மற்றும் பல.
- 1.2 புகைப்படப் பிரதி தாள்கள், கணனி காகிதாதிகள்
- 1.3 புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்

தொகுதி. இல: 02
**புகைப்படப் பிரதி இயந்திரங்கள், டோனர்கள், கார்ட்ரிச்கள் மற்றும் ரிபன்கள் என்பன.**

தொகுதி இல. 03
**அலுவலக தளபாடங்கள்**
- 3.1 அலுவலக தளபாடங்கள் (மரம்)
- 3.2 அலுவலக தளபாடங்கள் (உருக்கு)
- 3.3 அலுவலக தளபாடங்கள் (நாரிழை)
- 3.4 பொலிமர் மற்றும் பிளாஸ்டிக் தளாபடங்கள்
- 3.5 MDF தளபாடங்கள்

தொகுதி இல: 04
**அலுவலக உபகரணங்கள்**
- 4.1 கணிக்கும் பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், மின்சாரம் மற்றும் கையால் இயங்கும் தட்டச்சு இயந்திரங்கள், தொடர்பாடல் உபகரணங்கள், ரோணியோ இயந்திரம் தொலைநகல் இயந்திரம், இன்னோரன்ன.
- 4.2 கணனிகள், கணனி மென்பொருள்/ வன்பொருள் உருப்படிகள்
- 4.3 கட்புல, செவிப்புல உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
- 4.4 இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
- 4.5 CCTV கமரா முறைமைகள்
- 4.6 வலையமைப்பு உபகரணங்கள்

தொகுதி இல: 05
**மின்சார பொருட்கள் மற்றும் சாதனங்கள்**
- 5.1 உறைநிலை குளிர்சாதனங்கள், குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள்
- 5.2 மின் பிறப்பாக்கிகள், வளிச் சீராக்கிகள்
- 5.3 மின் விசிறிகள், வெதுப்பாக்கிகள் (Ovens), வெக்கியூம் கிளீனர்கள், Hot Cupboards, Water Dispenser, மின்சார கேத்தல்கள், நீர் வடிகட்டிகள்
- 5.4 தொலைக்காட்சிப் பெட்டிகள், வீடியோ ரெக்கோர்டர்கள், குரல் பதிவு இயந்திரங்கள்

தொகுதி இல: 06
**ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணம்**
- 6.1 ஆய்வுகூட உபகரணம் மற்றும் நுணுக்குக்காட்டிகள்
- 6.2 ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், மூலக்கூறு ரீஜன்ட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள்
- 6.3 விவசாய இரசாயனப் பொருட்கள்
- 6.4 சேதன பசளைகள்/ இரசாயன பசளைகள்
- 6.5 நாற்றுமேடை பொருட்கள்/ கன்றுகள்
- 6.6 ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் (Pipette tips, plastic tube போன்றன)
- 6.7 மருத்துவ உபகரணங்கள் மற்றும் மொடல்கள்
- 6.8 Manikin
- 6.9 பொறியியல் ஆய்வுகூடத்திற்கான கருவிகள் மற்றும் சார்புடைய கருவிகள்

தொகுதி இல. 07
**உணவு தரப்படுத்தல் இரசாயனங்கள் மற்றும் மறு துணைப்பொருட்கள்**
- 7.1 பால் உற்பத்தி மூலப் பொருட்கள்
- 7.2 Enzyme
- 7.3 கல்சியம் குளோரைட்
- 7.4 அனுமதிக்கப்பட்ட நிறமாக்கிகள் மற்றும் சுவையூட்டிகள்

தொகுதி இல. 08
**விலங்கு உயிரியல் சார்ந்த இரசாயனங்கள் மற்றும் பரிகாரங்கள்**
- 8.1 Taq Polymerase Enzyme
- 8.2 DNTP
- 8.3 100 Bas pair Ladder
- 8.4 Bovine Serum Albumin (BSA)

தொகுதி இல. 09
**கால்நடை மருத்துவ உருப்படிகள் மற்றும் விலங்கு முகாமைத்துவம் சார்ந்த உபகரணங்கள்**
- 9.1 கால்நடை மருத்துவ உருப்படிகள்
- 9.2 மருத்துவ உதவிகள்
- 9.3 விலங்குணவு சேர்மானங்கள்
- 9.4 இனப்பெருக்கம் சார்ந்த உபகரணங்கள்
- 9.5 விலங்குகளுக்கான கூடுகள் மற்றும் உணவு, நீர் உபகரணங்கள்

தொகுதி இல. 10
**மோட்டார் உதிரிப்பாகங்கள்**
- 10.1 வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்
- 10.2 டயர்கள், டியூப்கள் மற்றும் பெட்டறிகள்
- 10.3 வாகன முறைமை பயிற்சி சாதனங்கள் மற்றும் கருவிகள்

தொகுதி இல: 11
**கனரக உருப்படிகள் மற்றும் ஏனையவைகள்**
- 11.1 பெயின்ட்கள், பொலிஷ், வெக்ஸ், வார்ணிஷ், தின்னர் மற்றும் டேர்பென்டைன்
- 11.2 உருக்கு, ஜீ.ஐ. தகடுகள் மற்றும் பைப்கள், கம்பி ஆணிகள், போல்ட்கள் மற்றும் நட்டுகள், தண்ணீர் தாங்கிகள், கோடரிகள், வீல் பரோக்கள், Crowbars போன்றன.
- 11.3 PVC குழாய்கள் மற்றும் இணைப்புகள்
- 11.4 சமையலறை, வெட்டும் பொருட்கள் மற்றும துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சமையலறை உபகரணங்கள் குளியலறை கருவிகள்
- 11.5 தும்புத்தடிகள், பிரஸ்கள், ஈர்க்கிள் துடைப்பங்கள்
- 11.6 இறப்பர் மற்றும் தும்பு மெத்தைகள்
- 11.7 மின் குமிழ்கள், வயர்கள், மீட்டர்கள், கேபில்கள், சுவிச்சுகள், பிளக்டொப், ஹோல்டர்ஸ் மற்றும் ஏனைய மின்னியல் சாதனங்கள்
- 11.8 செங்கற்கள், மணல், சக்கை கற்கள், சிறு கற்கள் மற்றும் சுண்ணாம்பு, சீமெந்து, தரையோடுகள், கண்ணாடிகள்
- 11.9 தளபாடத்துக்கான மரங்கள்/ அரிந்த மரங்கள்

தொகுதி இல: 12
**விளையாட்டு துறை மற்றும் விளையாட்டுத்துறை உடைகள்**
- 12.1 விளையாட்டுத்துறைப் பொருட்கள்
- 12.2 விளையாட்டுத்துறை சாதனங்கள்

தொகுதி இல: 13
**விளையாட்டு துறை உடைகள்**
- 13.1 விளையாட்டுத்துறை உடைகள்

தொகுதி இல: 14
**மருந்துகள்**

தொகுதி இல: 15
**சீருடை துணிகள் மற்றும் திரைச்சீலை துணிகள், காலணிகள், மழை அங்கிகள்**
- 15.1 சீருடைக்கான துணிகள்
- 15.2 திரைச்சீலை பொருட்கள்
- 15.3 சப்பாத்துகள் (சாதாரணம்)
- 15.4 பாதுகாப்பு காலணிகள்
- 15.5 மழை அங்கிகள், முழுமையான உடைகள்

தொகுதி இல: 16
**பாதுகாப்பு உபகரணங்கள்**
- 16.1 தீயணைக்கும் கருவிகள் போன்றன.
- 16.2 தீப் பாதுகாப்பு உபகரணங்கள்

தொகுதி இல: 17
- 17.1 பதக்கங்கள் (வெண்கலம் மற்றும் தங்க முலாமிடப்பட்டவை)
- 17.2 பட்டச் சான்றிதழ் சுருள்கள்
- 17.3 பட்டதாரி மேலங்கிகள்
- 17.4 கிரீடங்கள் (Garlands)

**சேவைகளின் பெறுகைகள்**

தொகுதி இல: 18
**அலுவலக உபகரணங்களின் திருத்த வேலைகள்**
- 18.1 கையியக்க மற்றும் இலத்திரனியல் தட்டச்சு இயந்திர திருத்தவேலைகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணிக்கும் பொறிகளின் திருத்தவேலைகள்
- 18.2 கணனிகள், அச்சுப்பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
- 18.3 குளிர்சாதனப் பெட்டிகள், உறைநிலை குளிர்சாதனங்கள் மற்றும் வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள்
- 18.4 கட்புல/ செவிப்புல உபகரணங்களின் திருத்த வேலைகள்
- 18.5 தொடர்பாடல் உபகரணங்களின் திருத்த வேலைகள் (உதாரணம்: தொலைநகல் இயந்திரம்)
- 18.6 மருத்துவ உபகரணங்களின் திருத்தவேலைகள்

தொகுதி இல: 19
**அச்சு வேலைகள் மற்றும் புத்தகங்கள் கட்டுதல்**
- 19.1 அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டுதல்
- 19.2 மாணவர் பதிவுப் புத்தகங்கள் மற்றும் அடையாள அட்டைகளை அச்சிடல்

தொகுதி இல: 20
**பிரம்புக் கதிரை பிண்ணல் வேலைகள்**

தொகுதி இல: 21
**சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்குதல்**
- 20.1 பவுஸர்களில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை வழங்குதல்

தொகுதி இல: 22
**குழாய்க் கிணறுகள்**
- 22.1 குழாய்க் கிணறு பம்பிகளுக்கான சேர்விஸ்கள் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்
- 22.2 குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல்

தொகுதி இல. 23
**மின் பிறப்பாக்கிகள்**
- 23.1 மின்பிறப்பாக்கிகளுக்கான சேர்விஸ்கள் மற்றும் பராமரிப்புகள்

தொகுதி இல. 24
**மோட்டார் வாகன திருத்தவேலைகள்**
- 24.1 மோட்டார் வாகன திருத்தவேலைகள், சேர்விஸ் செய்தல் மற்றும் உராய்வுநீக்கம் செய்தல்
- 24.2 வாகன வளிச்சீராக்கி, வாகன மின்னியல், தகர வேலைகள், நிறப்பூச்சு, இயந்திர திருத்தங்கள்/ அப்போஸ்டரிங் வேலைகள்

தொகுதி இல: 25
**சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள்**
- 25.1 அலுவலகங்கள், விரிவுரை மண்டபங்கள், விடுதிகள் போன்றன
- 25.2 கலி (Gully) சேவைகள்
- 25.3 நிலச்சீராக்கம்
- 25.4 திரைச்சீலைத் துணிகள்
- 25.5 Dry cleaning சேவைகள் / சலவையக சேவைகள்
- 25.6 ஆய்வுகூட மேலங்கிகளுக்கான சலவைச் சேவைகள்
- 25.7 மெத்தை உறைகள், துவாய்கள், தலையணை உறைகளுக்கான சலவை சேவைகள்
- 25.8 எரிக்கப்பட்ட மற்றும் தகனம் செய்யப்பட்ட சடல எச்சங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள்

தொகுதி இல: 26
**உள்ளக அலங்கரிப்பாளர்கள்**
- 26.1 உள்ளக அலங்கரிப்பாளர்கள் (திரைச்சீலைகள், Vertical Blinds, Glass Tinted மற்றும் ஸ்டிக்கர்கள், மலர் அலங்கார ஏற்பாடுகள்)

தொகுதி இல: 27
**தொழிலாளர் சேவைகளை வழங்குதல்**
- 27.1 தொழிலாளர் சேவைகளை வழங்குதல்
- 27.2 பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்

தொகுதி இல: 28
**வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்**
- 28.1 குளியாப்பிட்டியிலிருந்தும் மற்றும் மாக்கந்துரயிலிந்தும் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல். எந்த இடத்திலிருந்து இந்த சேவையை வழங்க முடியும் என்பதை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். (கார், வேன், பஸ், லொறி, இன்னோரன்ன)

தொகுதி இல: 29
**நிர்மாண இயந்திராதிகள்**
- 29.1 JCB, பக்கோ, மண் அகழும் இயந்திரம், டிப்பர்கள், டிரக்குகள், மண்ணைக் கனப்படுத்தும் இயந்திரங்களை வாடகைக்கமர்த்துதல்

தொகுதி இல: 30
**மேற்காவிகளை (Canapees) வாடகைக்கமர்த்துதல்**

தொகுதி இல: 31
**உணவு பான (கேட்டறிங்) சேவைகள்**

தொகுதி இல: 32
**நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் (பிரசுரிப்பாளர்கள்/ உள்ளூர் பிரதிநிதிகள்)**

தொகுதி இல: 33
**தீயணைப்பு உபகரணங்கள் / தீ பாதுகாப்பு உபகரணங்கள்**

தொகுதி இல: 34
**பட்டமளிப்பு விழாக்களுக்கு படப்பிடிப்பு/ வீடியோ படப்பிடிப்பு**

**வேலைகளின் பெறுகை**

தொகுதி இல: 35
**கணனி வலையமைப்பு**

தொகுதி இல: 36
**அலுமினிய கட்டமைப்பு** (அலுமினிய பகுதிபிரிப்பு, ஜிப்சம் அட்டை பகுதி பிரிப்பு, உட்கூரை வேலைகள், MDF பகுதிபிரிப்பு)

தொகுதி இல: 37
**உருக்கு மற்றும் துருப்பிடிக்காத உருக்கு கட்டமைப்புகள்** (வேலி, பாரமான உருக்குத் தளபாடங்கள்/ Balustrades/ மின்ஒட்டு வேலைகள்/ Trusses)

தொகுதி இல: 38
**வீதி நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்**

தொகுதி இல: 39
**கட்டிட நிர்மாண வேலைகள், திருத்த வேலைகள், புதுப்பித்தல், விரிவாக்கங்கள், நிறப்பூச்சு மற்றும் புனருத்தாரண வேலைகள்** (CIDA பதிவுகளின் பிரதி ஒன்று இணைக்கப்படல் வேண்டும்)

தொகுதி இல: 40
**தச்சுவேலை உருப்படிகள் மற்றும் துணைப்பாகங்கள்**

தொகுதி இல: 41
**வேலைத்தள இயந்திராதிகளுக்கான கருவிகள் மற்றும் வழங்கல்கள்**

தொகுதி இல: 42
**உருக்கியொட்டுதல் மற்றும் வார்ப்புகள் வழங்குதல் மற்றும் துணைப்பாகங்கள்**

தொகுதி இல: 43
**மின்சாரம் மற்றும் இலத்திரனியல் ஆக்கக்கூறுகள் மற்றும் துணைப்பாகங்கள்**

### வழங்குநர்களை பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் - 2024

**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்**

01. வியாபார நிறுவனத்தின் பெயர் :...............................................
02. முகவரி :...............................................
03. தொடர்புகொள்ளக்கூடிய விபரங்கள்:...............................................
 * தொலைபேசி இலக்கங்கள் :...............................................
 * தொலைநகல் இலக்கங்கள் :...............................................
 * மின்னஞ்சல் முகவரிகள் ::...............................................

04. வியாபார நிறுவனத்தின் தன்மை இயைபுடைய கூட்டினுள் அடையாளமிடவும் (✓ அடையாளமிடவும்)
 - ஏக உரிமையாளர் ☐
 - பங்குடமை ☐
 - பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ☐
 - அரச உரிமையான இணை நிறுவனம் ☐
 - கூட்டுத்தாபனம் ☐

05. உரிமையாளர் / உரிமையாளர்களின் பெயர் : ...............................................
06. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ...............................................
07. உற்பத்தியாளர்/ ஏக இறக்குமதியாளர்/ ஏக முகவர்/ ஏக விநியோகஸ்தர் அல்லது கையிருப்பாளர்கள் என்பது பற்றி: ...............................................
08. வியாபார பதிவு இலக்கம் : ...............................................
09. வியாபாரத்தின் தன்மை : ...............................................
10. வங்கியாளர் பெயர்/ மற்றும் கணக்கு இலக்கங்கள் : ....................

11. VAT இலக்கம் : ...............................................
 TIN இலக்கம் : ...............................................
12. பதிவு மேற்கொள்ள விரும்பும் : ...............................................
 உருப்படி தொகுதிகள் இலக்கம் மற்றும் உப - தொகுதி இலக்கம்
 i. தொகுதி இல: ☐☐
 ii. உப தொகுதி இல. ☐☐☐☐☐☐
 * (ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படி தொகுதி/ சேவைகள் தொகுதி ஆகியவற்றுக்கு பதிவு விரும்பும் பட்சத்தில் ஒவ்வொரு உருப்படி தொகுதி/ சேவைகள் தொகுதி ஆகியவற்றுக்கு வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.)
13. 30 நாட்களுக்கான கடன் வசதிகளை வழங்குவதற்கு உடன்பாடு உண்டா என்பது பற்றி : ...............................................
14. கிடைக்கத்தக்க ஏனைய போக்குவரத்து களஞ்சியப்படுத்துதல் போன்ற வசதிகள் : ...............................................

15. i. வங்கி வரைவு இல: ...............................................
16. ii. தொகை ரூ : ...............................................

பின்வரும் சான்றிதழ்களின் பிரதியொன்றை இணைக்கவும். இயைபுடைய கூட்டினுள் அடையாளமிடவும் (✓ அடையாளமிடவும்)

1. வியாபாரப் பதிவுச் சான்றிதழ் ☐
2. VAT பதிவுச் சான்றிழ் ☐
3. தேசிய அடையாள அட்டை அல்லது அட்டைகள் ☐
4. CIDA சான்றிதழ்கள் ☐
5. உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதம் ☐

திகதி :.................................

...............................................
வழங்குநரின் கையொப்பம்
உத்தியோகப்பூர்வ இறப்பர் முத்திரை

# பெறுகை அறிவித்தல்

(விலைமனு சமர்ப்பித்தலின் இறுதித்தினத்தை நீடித்தல்)

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**Request for proposal for the Procurement of a suppliers for supply, Maintenance and charging of 200 numbers of fully-built Battery Electric Air-Conditioned Buses for Passenger Transportation Based on Per-Kilometer Rate Payments**

2023.09.06 ஆம் திகதியன்று பத்திரிகையில் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள பெறுகை தொடர்பான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

முன்னராக விலைமனு வழங்கல் மற்றும் விலைமனு மூடல் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட திகதிகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.

| விளக்கம் | முன்னர் வழங்கப்பட்ட திகதி மற்றும் நேரம் | மாற்றப்பட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| விலைமனு வழங்கல் | 2023.10.05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் | 2023.10.19 ஆம் திகதியன்று பி.ப.3 மணி வரையும் |
| விலைமனுவை சமர்ப்பித்தல் | 2023.10.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக | 2023.10.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக |
